
www.tamilarangam.net

# சஞ்சீவி

# Chanchive

1995

மலர் 32



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1995

# சஞ்சீவி

மலர். 32

அட்டைப் படம்....

நா
ளை
ய

த
மி
ழ்
ழ
ம்

T.சேனக்தர்.

பக்கம்: உள்ளடக்கம்:


3 நோக்கு
6 படித்ததும் கேட்டதும்
8 கவிதை – அயல் வீடு
9 கட்டுரை – குழந்தையை வையாதே
10 சிறுகதை – காதலான மனமும் கல்யாணமான உடலும்
13 பேட்டி
18 வாணி விழா என்ற பெயரில் பிரண்டி விழா
19 குர்திஸ்தான் விடுதலையும் கவிதையும்
23 மனவருத்தங்கள்
26 கவிதை – யாரோடு நோக
28 கடிதம்
30 கட்டுரை – நாக் அவுட்
36 கவிதை – போரும் தீர்வும்
37 கட்டுரை – ஆண்பாவம்
42 கட்டுரை – கவி என்றால் என்ன
43 புகைமண்டலத்துள் மூழ்கிய உண்மைகள்
47 குறுக்கெழுத்துப் போட்டி


தொடர்புகளுக்கு:

CHANCHIVE
DANMARKS GADE 10
7500 HOLSTEBRO
DENMARK.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு......

***சில வருடங்களுக்கு முன்* குவைத் நாட்டில் எண்ணைக் கிணறுகள் குண்டுத் தாக்கலினால் தீப் பிடித்து எரிந்த போது எழுந்த புகையினைப் போன்று, இலங்கையில் எரிபொருளினைத்தேக்கி வைத்து , சுத்திகரித்து நாடு பூராவும் விநியோகிக்கும் எண்ணைக் குதங்கள் தாக்குதலுக்குள்ளாகி வெடித்து எரிந்தமை யாவரும் அறிந்ததே. இத்தாக்குதலானது இலங்கை அரசின் பொருளாதாரத்தினை முடக்குவதற்கு மட்டுமல்ல, ஈழத்தின் வடக்கு வாழ் சாதாரண தமிழ் மக்களை கொன்று குவிப்பதன் மூலம் புலிகளை அழிப்பதாக கூறும் அரசின் செயற்பாட்டினைத் திசை திருப்புவதற்காகவும் எனலாம்.**

தேர்தல் காலங்களில் வழங்கும் வார்த்தைகள் எல்லாம் ஆட்சியதிகாரத்தில் ஏறியவுடன் வெற்று வார்த்தைகளாகி காற்றில் பறக்க விடுவதே இலங்கை அரசியல் அகராதியில் நாம் பார்த்து வரும் உண்மை. உயிர் இழப்புகளை நாளும் புரிந்து கொண்டவள் என்று சொல்லி மக்களின் அனுதாப அலையோடும் அவர்களின் பல் வகைப்பட்ட எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் அதிகாரத்துக்கு வந்த சந்திரிகா அரசு இன்று ஆயிரக்கணக்கான மக்களை அழித்துக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களுக்கென்று தனியான கலாச்சாரம், அபிலாசைகள் இருக்கின்றது என்று மேடைகளில் முழங்கிய சந்திரிகா இன்று இலங்கை அரசியலுக்கே உரித்தான சுத்துமாத்துடன் தமது அரசியலை விரிவுபடுத்திக் கொண்டிருக்கின்றார்.

வடக்கு நோக்கி 50,000க்கும் மேற்பட்ட இராணுவத்தினரை அனுப்பி வைத்து 5வருடங்களாக இழந்த யாழ்நகரை மீண்டும் கைபபற்றப் போவதாகக் கூறிக் கொண்டு அப்பாவிப் பொது மக்களையும், அவர்கள் இருப்பிடங்களையும் அழித்து வருகின்றது. தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொண்டால் போதும் என்று பல இலட்சக் கணக்கான மக்கள் தென்மராட்சிப் பகுதியை நோக்கி

www.tamilarangam.net

இடம்பெயர்ந்துள்ளார்கள். இத்தனை இலட்சம் மக்களும் தங்குமிட வசதியின்றி மழையிலும் , வெயிலிலும் பல விதமான துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள். அகதிகளுக்கான உணவுப் பொருட்கள் மருந்துவகைகள் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் முற்றாக தடைசெய்யப் பட்டுள்ளதால் மக்கள் மத்தியில் பயங்கரத் தொற்று நோய்கள் பரவத் தொடங்கியுள்ளது . அகதிகளுக்கு உதவி செய்து வரும் வெளிநாட்டு நிறுவனங்களையும் சந்திரிகா அரசு முற்றாகத் தடை செய்துள்ளது .

மேலும் பாரிய தாக்குதலை வடக்கில் மேற்கொள்வதுடன் அதன் உண்மைகள் வெளிவராத வண்ணம் மக்கள் தொடர்பு சாதனங்கள் அனைத்துக்கும் தணிக்கை செய்துள்ளது. இதன் படி தமது இனவாதக் கருத்துக்களுக்கு அமைவானதும் வெளியுலகத்தினை நம்பவைத்து மென்மேலும் கடன், நிதி , ஆயுத உதவியென வெளிநாடுகளிடம் பிச்சையெடுத்து புலியழிப்பு எனச் சொல்லிக் கொண்டு அப்பாவி மக்களை அழித்து வருகின்றது .

இதே போன்று சிங்களக் குடியேற்றங்களிலும் பல அப்பாவிச் சிங்கள மக்களும் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். இதனை புலிகளே செய்துள்ளார்களென இலங்கையரசு கூறுகின்றது. இதனைப் புலிகள் மறுத்துள்ளார்கள்.(வட பகுதியில் வைத்து BBC க்கு புலிகள் சார்பில் கரிகாலன் வழங்கிய பேட்டி) வடபகுதியில் அப்பாவித் தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவது எப்படி அநியாயமானதோ அதே போன்று சிங்களப் பொதுமக்கள் கொலை செய்யப்படுவதும் அநியாயமானதே.

இன்று வெளிநாடுகளில் இயங்கிவரும் பத்திரிகை, தொலைகாட்சி போன்ற செய்தி நிறுவனங்கள் தமிழ்ப்பிரதேசங்களில் நடைபெறும் கொலைகள் பற்றிய செய்திகளை வெளியிடாமல் இலங்கையரசுக்குச் சாதகமான செய்திகளையே வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அண்மையில் நாகர் கோவில் பாடசாலை மீதான தாக்குதலில் 150க்கும் அதிகமானோர் கொலை செய்யப்பட்ட செய்தி (70க்கும் அதிகமானோர் மாணவர்கள்), மானிப்பாய்த் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்து கொண்ட அப்பாவித் தமிழ் மக்கள் பலர் கொல்லப்பட்ட செய்தியும் ஏன் தான் இந்த வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. கொலை செய்யப்படும் அப்பாவித் தமிழ்க் குழந்தைகள், வளர்ந்தவர்கள் எல்லோருமே புலிகள் என்ற இலங்கையரசின் செய்திகளை தவறென்று தெரிந்தும் அரசுக்குச் சார்பாக செய்திகளை வெளியிட்டு வருவதோடு தமிழ்மக்களின் போராட்டத்தை மழுங்கடிப்புச் செய்கின்றது இந்த வெளிநாட்டு செய்திநிறுவனங்கள்.

www.tamilarangam.net

**இதன் மூலம் தமிழ்மக்களின் போராட்டத்தினை பின்னடையச் செய்கின்றார்கள்.**

**இந்நிலை இப்படியிருக்க வடபகுதியை இராணுவம் முற்றுகையிட்டதால் இடம் பெயர்ந்த இலட்சக் கணக்கான மக்கள் தங்குமிட வசதியின்றி மழையிலும்,வெய்யிலிலும், பசி,பட்டினி,நோய் துன்பங்களினால் வாடி வதங்கிக் கொண்டிருக்கின்றார்கள். எம் மக்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளை செய்வதே இன்றைய தேவையாகும்.**

- சஞ்சீவி.

## இவர்கள் கோவிலில் கொல்லப்பட்ட புலிகளாம் !

கடந்த செப்ரெம்பர் மாதம் 21ஆந் திகதி யாழ்ப்பாணக் குடா நாட்டின் வடமராட்சிப் பகுதியில் நாகர் கோயில் மகா வித்தி யாலயத்தின் மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலினால் 70க்கும் அதிகமான மாணவர்கள் கொல்லப்பட்டனர். இவர்க ளில் நாற்பத்தயொரு பேர் அடையாளம் காணப்பட்டதுடன் அவற்றுள் பெரும்பான்மையானோர் 8 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட பாடசாலைப் பிள்ளைகள் எனத் தெரிய வருகிறது. இவ்வாறன தாக்குதலொன்று நடத்தப்படவில்லையெனவும் தாக்குதல் காரணமாகப் பாடசாலைப் பிள்ளைகள் கொல்லப்படவில்லையெனவும் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

<u>கொல்லப்பட்டோரில் 30 பிள்ளைகளது பெயர் விபரங்கள்:</u>

1. உஷாந்தினி தர்மலிங்கம் (13)
2. நாகலோசினி மார்க்கண்டு (10)
3. சகுந்தலா தாமோதரம் (12)
4. இராசகர்ணர் உமாகாந்தன் (17)
5. துஷாந்தினி புர்ணராசா (14)
6. அமிர்தனா இரவீந்திரன் (10)
7. இரஜிதா பாலச்சந்திரன் (10)
8. சுந்தரலிங்கம் பழனிமலை (15)
9. கு.தர்ஷினி (13)
10. செல்வநிதி செல்வகுலசிங்கம் (17)
11. கிருஷ்ணகுமார் நவசீலன் (13)
12. கவிதா இராஜரத்தினம் (10)
13. நாகமுத்து செந்தில்வேல் (15)
14. அமலவிஜி அல்போன்ஸ் (14)
15. மகாலிங்கம் சண்முகவடிவேல் (16)
16. தர்ஷனி குலரத்தினம் (12)
17. த.மகிந்தா (10)
18. த.மேதினி (14)
19. நவமணி விதூரன் (14)
20. செல்வம் (16)
21. இராகவன் (16)
22. சடிருவ் (13)
23. இரத்தினம் அந்தனிதாஸ் (08)
24. மரியவச்சி மனோகரதாஸ் (08)
25. ஷர்மிலா ஜோன் பொஸ்கோ (05)
26. துஷ்யந்தினி சின்னத்துரை (12)
27. விஜிதா ஈஸ்வரநாதன் (13)
28. திலீபன் ஈஸ்வரநாதன் (11)
29. விசீகரன் ஈஸ்வரநாதன் (07)
30. சகிதா ஈஸ்வரநாதன் (03)

(நன்றி.சரிநிகர்.)

www.tamilarangam.net

# படித்ததும்... கேட்டதும்...

யாழ்நகரை கைப்பற்றுவதாக கூறிக் கொண்டு தமிழ்ப்பகுதிகள் மீது சிங்கள இராணுவம் நடாத்திய ஆக்கிரமிப்பினால் பல இலட்சம் தமிழ் மக்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளார்கள். ஒரே இரவில் பல இலட்சம் மக்கள் தங்கள் அத்தியாவசியப் பொருட்களுடன் தென்மராட்சிப் பகுதிக்கு கால் நடையாக நடந்து சென்றார்கள். ஒரே வேளையில் பல இலட்சம் மக்கள் நடந்து சென்றதால் 20 – 25 மணித்தியாலங்கள் ஆனதுடன் பலர் சன நெரிசலினால் இறந்து போயினர்.

இன்று அகதிளாக இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் குழந்தைகளுக்கான உணவுப் பொருட்கள் கிடைக்காமையால், பலர் குழந்தைகளுக்கு பனம் வெல்லத்தினை கரைத்து மூன்று நேர உணவாக ஊட்டி வருகின்றார்கள்.

யாழ். குடாநாட்டிலிருந்து 1100 குடும்பங்கள் மன்னார் பெரும் நிலப்பரப்பினை சென்றடைந்துள்ளார்கள். நானாட்டான், பாலம்பிட்டி பகுதிகளில் உள்ள பாடசாலைகள், ஆலயங்களில் இவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். கடந்த சில நாட்களாக மன்னாரில் பெய்த அடை மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நாகர் கோவில் பாடசாலை மீது விமானப்படை நடாத்திய தாக்குதலில் பல மாணவர்களும் பெற்றோர்களும் கொல்லப்பட்டது யாவரும் அறிந்த உண்மை. ஆனால், இப்படி ஒரு தாக்குதல் நடாத்தப்படவில்லையெனவும், பாடசாலை மாணவர்கள் எவரும் கொல்லப்படவில்லையெனவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது.

சம்பவம் நடந்த அன்று சுப்பர் சொனிக் விமானம் வட்டமிடுவதைக் கண்ட பாடசாலை அதிபர் மாணவர்களை அந்த இடத்தை விட்டு அகலுமாறு

www.tamilarangam.net

**அறிவித்தார். அருகில் உள்ள பெற்றோர்கள் விமானம் வட்டமிடுவதைக் கண்டு தங்கள் குழந்தைகளை அழைத்துச் செல்வதற்காகப் பாடசாலைக்கு ஓடி வந்தனர். விமானம் மீண்டும் வட்டமிடுவதைக் கண்டு மாணவர்களும், பெற்றோர்களும் அருகில் இருந்த மரத்தின் கீழே ஒழித்துக் கொண்டனர். ஆனால் விமானம் வீசிய குண்டு மரத்தின் மீது விழுந்ததால் மரத்தின் கீழிருந்த அத்தனை பேரும் கொல்லப்பட்டார்கள்.**

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்குமிடையே அடுத்த கட்டச் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நடுவராகச் செயற்பட அமெரிக்கா முன் வந்துள்ளது. யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பலவீனப்படுத்தப்பட்ட பின் இப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகுமென அரசின் தகவல் வட்டாரங்கள் கூறுகின்றன.
அது தொடர்பாக ஆரம்பக் கட்டப் பேச்சு வார்த்தைகளுக்காக அமெரிக்கக் குழுவொன்று இம் மாதம் இலங்கை வரவுள்ளது. அக்குழுவினர் முதலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையுடனும், அதன் பின்பு அரசுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தத் தயாராகுகின்றனர்.
ஐக்கிய நாடுகள் சபையின் ஐம்பதாவது வருட விழாவில் கலந்து கொண்ட சந்திரிகா குமாரணதுங்கா, அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டனுடனும், இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடனும், அமெரிக்க அரச செயலாளருடனும் வடபகுதி இனப்பிரச்சினை பற்றிக் கலந்துரையாடினார்.
வடபகுதிப் பிரச்சினைக்கு உறுதியான தீர்வு தீர்வொன்றோ என இரு சாராரும் உடன்பட்டதுடன், சமாதானப் பேச்சு வார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க சந்திரிகா நிபந்தனைகளை முன் வைத்தார். யுத்த நிறுத்தம், அடையாளத்திற்காவது ஆயுதக் கையளிப்பு, குறிப்பிட்ட காலவரையறையினுள் பேச்சுவார்த்தைகளை நடத்தி முடிக்க இணங்குவதே அந் நிபந்தனைகளாகும்.
சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட முன் சந்திரிகா அமெரிக்கவுடனும் இந்தியாவுடனும் நடத்திய பேச்சு வார்த்தைகளில் யுத்த உதவிகளை வழங்க இரு நாடுகளுமே இணங்கியுள்ளன.
அதன்படி இந்தியா குறொக்கடைல் ( Crocodile ) ஹெலி கொப்ரர்களை வழங்கவும், அமெரிக்கா இது வரை இலங்கைக்கு வழங்கியிராத நவீன ஆயுதங்கள் பல வழங்கவும் இணங்கியுள்ளன.
யாழ்ப்பாண நகரிற்குள் செல்ல அவ் ஆயுதங்கள் மிகவும் அவசியமானவை எனத் தெரிய வருகிறது. எவ்வாறாயினும் நடுவர் நாடாக "அமெரிக்கா" இங்கு வருமுன் யுத்த நடவடிக்கையினூடாகப் புலிகள் இயக்கத்தைப் பலமிழக்கச் செய்யப்படுமென அரச தகவல் வட்டாரங்கள் கூறுகிறது.

பாதுகாப்புப் படைகள் யாழ்பாணத்தைக் கைப்பற்றிய பின் அதை மையமாகக் கொண்டு புலிகளின் பிடியிலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம், பரந்தன், விஸ்வமடு, வெற்றிலைக்கேணி உட்பட்ட பல பிரதேசங்களை கைப்பற்றுவதற்காக வெளிநாடு சிலவற்றின் உதவியுடன் ஜனவரி மாதத்திலிருந்து பாரிய தாக்குதல் ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

( நன்றி சரிநிகர் )

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அயல் வீடு...

நீண்ட மரம் வளர்த்து
நெடுநாளாய் காவல் செய்து
வேண்டி மழை பெய்ததனால்

நிலம் கிழித்து
மரம் பாறும் என்றுரைத்து
கிளை ஒன்றை அதில்
வெட்டிக் காம்பொன்றை
கோடரிக்கு செதுக்கிச்
சொருகி என் தந்தை
தறித்து நொந்த
மரமெமது!

பாறும் மரச்
சுமை தாங்கா
எம் வீட்டின்
எலியோடி முதலாடி
அடியோடு கப்புகளும்
பாறிப் போக
புது வீடு கட்டத்
திராணியற்று அயல்
வீட்டுத் தாவாரத்
திண்ணையிலே ஒய்யாரத்
தஞ்ச வாழ்வு...!

– லோகநாதன்.செ.

www.tamilarangam.net

# ஒரு குழந்தையை வையாதே பெற்றோரே...?

மித்திரா...

எனக்கு பெரிதாக எழுதத் தெரியாது . ஆனால் நான் கண்ட அனுபவித்த இந்தக் கஸ்ரத்தை நீங்களும் அறிந்து கொள்வதோடு ஒரு சிலராவது அக்கறை கொள்ள வேண்டும் என்பதற்காக இதை சஞ்சீவியில் எழுத விரும்புகின்றேன்.

இதை நீங்கள் ஒரு கடிதமாகவும் எடுத்துக்கொள்ளுங்கள்.இல்லையேல் ஒரு கதையாகவும் எடுத்துக்கொள்ளுங்கள்.

இவ்வருட கோடைகால விடுமுறையில் நடைபெற்ற எனது நண்பன் ஒருவனின் திருமணத்திற்குச் சென்றிருந்தேன்.அந்தத் திருமணத்திற்காக அவனது சொந்தக்காரர்கள் என லண்டன்,ஜேர்மன், பிரான்ஸ்,சுவீடன்.....எனப்பல நாடுகளிலிருந்து குழந்தை குட்டிகளுடன் வந்திருந்தார்கள்.

திருமணம் நடந்துகொண்டிருந்த மண்டபத்தில் குழந்தைகள் பல அங்கும் இங்குமாக ஓடி விளையாடுவதும்,நிற்பதும்.....பின்னர் ஒன்றுமே பேசாது தனித்தனியே வந்து தங்கள் பெற்றோருடன் ஒட்டிக்கொண்டார்கள்.சில டென்மார்க் வாழ் குழந்தைகள் மாத்திரம் தொடர்ந்து விளையாடிக் கொண்டிருந்தன. அதைப்பார்த்துக் கொண்டிருந்த மற்ற நாட்டுக் குழந்தைகள் அவர்களுக்கு கிட்ட நெருங்குவதும் பின்னர் சலிப்படைந்து மீண்டும் தாய் தந்தையருடன் ஒட்டிக்கொள்வதுமாய் இருந்தனர்

வந்தவர்களைக் கவனிக்க வேண்டும்.....சாப்பாடு கொடுக்க வேண்டும்.....தேனீர்,கோப்பி போட வேண்டும் என்ற வேலைகள் இருந்ததால் நானும் அதைப் பெரிது படுத்தாது வேலைகளில் இறங்கி விட்டேன்.

சில மணித்தியாலங்களின் பின், திருமணம் முடிந்து மணமக்களுக்கு அன்பளிப்புக்களை கொடுப்பதற்காக பல பேர் வரிசையில் நிற்க.....பலபேர் மண்டபத்தை விட்டுக் கழரவும் அந்த மாப்பிள்ளை நண்பனின் சொந்தக்காரர்கள் மட்டுமே மிஞ்ச குழந்தைகளும் குறைந்து விட்டனர்.

ஒவ்வொரு குழந்தைகளும் எட்ட நின்ற படி ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றார்கள். நானும் அவர்களை மெதுவாக நோட்டம் விட்டுக்கொண்டிருந்தேன். இவர்கள் ஏன் ஒன்று கூட முடியவில்லை....? இவர்கள் ஏன் சேர்ந்து விளையாடவில்லை....?

சில நிமிட யோசனைக்குப் பின், முடிந்தவரை ஒவ்வொரு குழந்தைகளுடனும் கதைக்க முயன்றேன்.பின்னர் அவர்களையும் ஒன்று சேர்த்து விளையாட முயற்சித்தேன். அவர்களால் ஒன்று சேர முடியவில்லை. என்னாலும் ஒன்று சேர்க்க முடியவில்லை. ஏன்......? ஏன்.....

(தொடர்ச்சி பக்கம் 25)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காதலான மனமும் கல்யாணமான உடலும்

— லாயா.



ஆசை அறுவது நாட்கள் மோகம் முப்பது நாட்கள் என்ற கணக்கெல்லாம் தாண்டி இப்பொழுது சின்னச் சின்ன விசயங்களை எல்லாம் பெரிதுபடுத்தி சச்சரவு பண்ணிக் கொண்டு வாழ்கின்றோம் கிரியும் நானும்.

எமக்கு திருமணமாகி இன்னும் ஒரு வருடம் கூட பூர்த்தி அடையவில்லை. பெரியவர்களால் நிச்சயமான திருமணம் தான். ஒரே நாடு–ஒரே இனம்–ஒரே மதம்–ஒரே மொழி . 80 வீதம் ஜாதகப் பொருத்தம் கூட. கிரியின் வீட்டாருக்கும் என் வீட்டாருக்கும் நிறைய சந்தோசம் எமக்குத் திருமணம் செய்து வைத்ததில்.

ஆரம்பத்தில் எனக்கு இந்த திருமணத்தில் கொஞ்சம் கூட இஷ்டம் இருந்ததில்லை. முன்பின் தெரியாத ஒருவருடன் எப்படி வாழ்வைத் தொடங்குவது என்ற பயம் ஒரு புறம்... அவரைப் பிடிக்காவிடினும் காலில் போட்ட செருப்பு கடிக்கிறது என்று கழற்றி வைக்க முடியாதே... இப்படிப் பல குழப்பங்கள். ஆனாலும் இது தான் நம் தமிழர் வாழ்க்கை. முறை, பண்பாடு. இப்படி எத்தனையோ பேர் வாழ்ந்திருக்கிறார்கள், வாழ்கின்றார்கள், நானும் தான் வாழ்ந்து பார்ப்போமே !.. திருமணத்திற்குச் சம்மதித்தேன்.

அதற்குப் பிறகு படிப்படியாக என்னுள் புதிதாக ஒருவரை தெரிந்து கொள்ளப்போகிற ஆர்வமும் அவரோடு வாழப்போகிற வாழ்க்கையை அறிந்து கொள்கிற ஊக்கமும் ஏற்படத் தொடங்கியது . கிரியும் நானும் ஒருவரை ஒருவர் புரிந்து காதலித்து . ஒருவர் எதிர்பார்ப்புக்களை , ஆசைகளை மற்றவர் நிறைவேற்றி, எம் மணவாழ்வில் சந்தோசம் காண வேண்டும். நம் இனம், மதம், மொழி, நாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லாம் தான் ஒத்துப் போய் விட்டதே. மனம் தானே பாக்கி,அதையும் ஒட்டத் தான் பார்ப்போமே.

*****

வீற்றோ சிகரட்டை எடுத்து தன் உதட்டுக்குள் சொருகி லைட்டரைத் தட்டினான். நான் மெதுவாக உதட்டில் இருந்த சிகரட்டை உருவி என் கைக்குள் வைத்துக் கொண்டேன். அவனோ அதை என் கைக்குள் இருந்து பிரித்தெடுத்து மறுபடியும் தன் உதட்டுக்குள் செருகினான். சில நாட்களாக வீற்றோ ஏதோ போல் இருந்தான். அதிகம் சிந்திப்பவனாக, கவலைப்படுபவனாக, தடுமாறுபவனாக.....அவன் பக்கமாக சாய்ந்து அவன் கைக்குள் புகுந்த நான்.

"ஏன் ஏதோ போல் இருக்கிறாய்? "என்றேன். அவன் கண்களைப் பார்த்தேன். அதே பார்வை. இந்தப் பார்வை தான் கல்லாக இருந்த என்னை கனிய வைத்தது .

நசீர் வீற்றோ மொகமட்டை எனக்கு ஐந்து வருடங்களாகத் தெரியும். பாக்கிஸ்தானில் இருந்து டென்மார்க் வந்த போது அவனுக்கு ஏழு வயது . வீற்றோவும் நானும் ௯ம் வகுப்பில் படிக்கும் போது சந்திப்பு ஏற்பட்டது . பிறகு 10ம் வகுப்பு , Gymnasium என ஒன்றாகப் படிக்கின்றோம். வெவ்வேறு நாடு– இனம் – மதம் – மொழி என்றிருந்த எம்மை இந்த நாட்டு கல்லூரி வாழ்க்கை ஒன்று சேர்த்தது .

இன்னும் சில நாட்களில் நம் gymnasium வாழ்க்கை முடிந்துவிடும். அதற்குப் பின்பு கோடை கால விடுமுறை. பின்பு வீற்றோ பல்கலைக்கழகம் போவான். நான் கலைக்கல்லூரி போகிறேன். ஒரு வேளை நமக்குள் ஏற்படப்போகும் இந்தப் பிரிவை எண்ணி கவலைப்படுகிறானோ? என்று எண்ணியவாறு வீற்றோவின் தோளில் சாய்ந்தேன். அவனும் பதிலுக்கு தன் கைகளுக்குள் என்னை அடக்கிக் கொண்டான்.

"சொல் வீற்றோ" அவன் முகத்தைப் பார்த்தேன்.

என் கண்களைப் பார்த்த வண்ணம் "நாம் நிரந்தரமாகப் பிரியும் நேரம் வந்துவிட்டது அனு"கூறியவாறு அவசரமாக என் உதட்டில் முத்தம் கொடுத்தான்.

"ஏன் அப்படி சொல்கிறாய்? நீ பல்கலைக் கழகம் போனாலும் இங்கு தானே இருப்பாய். பிறகெதற்கு நிரந்தரப்பிரிவு?"

"அதுவல்ல பிரச்சனை"-வீற்றோ.

"அப்ப வேறு என்ன?"- மறுபடியும் என்னைத் தன்னுடன் அணைக்க முற்பட்ட அவன் கைகளைத் தள்ளி விட்டு ஜன்னலோரம் போய் நின்றேன். அழுகை வந்து விடும் போல் இருந்தது , வரவில்லை.

" நாம் ஆரம்பத்தில் பேசியது உனக்கு ஞாபகம் இருக்கா அனு? "- வீற்றோ.

சுமார் இருபது மாதங்களுக்கு முன்பு எமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் போது நமக்கு நன்றாக விளங்கியது . எமக்கு ஒன்றாகச் சேர்ந்து எந்த எதிர்காலமும் இல்லை என்பது . நம் பிறப்பின் வேற்றுமை நம் சமுதாயத்தின் எதிர்பார்ப்பே அதற்குக் காரணம். வீற்றோவிற்கு அவனின் மைத்துனி ஒருத்தியை சிறு வயதிலிருந்தே நிச்சயம் பண்ணி வைத்திருக்கிறார்கள்.அவளும் பாகிஸ்தானில் வீற்றோவிற்காக காத்திருக்கின்றாள்.என் நிலையும் அதே தான்.என் மாப்பிள்ளை யார் என்பது தெரியாது. ஆனால் என்னைப் பெற்றவர்கள் ,என் சமுதாயம் எதிர்பார்ப்பதும் அதுதான்.இந்நிலை நம்மை நெருங்கும் போது, நமக்கு சரி எனப்படுவதை செய்வது என முடிவெடுத்தோம்.

"அப்படியானால்....." எனக்கு விளங்கிவிட்டது . இதயத்தில் இருந்த வலி வயிற்றுக்கும் தொண்டைக்கும் பாய்வது போல் இருந்தது . எச்சிலை விழுங்கி சமாளிக்கிறேன்.

"இந்த சமர் விடுமுறைக்கு என்னை என் நாட்டிற்கு கூட்டிப்போவதாக என் பெற்றோர்கள் கூறுகின்றார்கள்...." அவன் தொடர்ந்து கூற முற்படுகையில் நான் அவன் வாயைப் பொத்தினேன்.

"எதுவும் சொல்லாதே வீற்றோ.எனக்கு விளங்குகிறது...." கூறியபடி அவன் கழுத்தை இறுக்கிக் கட்டிக் கொள்கிறேன்.அவனும் என்னை தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொள்கிறான்.என் பிடி இன்னும் இறுகின்றது . அவனுக்குள் ஒழிந்து கொள்ள வேண்டும் போல் இருக்கின்றது .

.....எவ்வளவு நேரம் அப்படி நின்றோமோ தெரியவில்லை . ஆனால் அவனிடமிருந்து விடுபடும் போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்ணீருக்கு பதிலாக புன்னகையுடன் விடுபட்டுக்கொண்டேன். அடுத்து வந்த நாட்கள் எல்லாம் ரெம்பவும் மரியாதையுடன் இரண்டு புதியவர்கள் பழகுவது போல் பழகிக் கொண்டோம். பாடசாலை இறுதி நாள்,எதிர்கால வாழ்க்கைக்கு வாழ்த்துக்கள் கூறி விடைபெற்றுக் கொண்டோம்.
மாதங்கள் சென்றன.... பின்பு தான் கிரியை எனக்கு முடிவாக்கினர்கள்.என் வாழ்க்கைக்கு ஒரு துணை வேண்டும்,என் வலிக்கும் மருந்து வேண்டும். கடைசியில் கிரியை திருமணம் செய்ய சம்மதித்தேன். திருமணம் நிச்சயமாக்கப்பட்ட பின்பு கிரியை ஒரு முறைதான் சந்தித்தேன்.பண்பாகப் பேசிப் பழகினார். கவரும் விதமாக இருந்தார்.அதைவிட நிறையப் படித்தவர் என்பதால் புரிந்துணர்வு உள்ளவராக இருப்பார் எனவும் நினைத்துக் கொண்டேன். நம் திருமணம் இனிதாக நடந்தது .

திருமணமாகி அடுத்தடுத்த மாதங்களெல்லாம் கிரி நிறைய சந்தோஷமாக இருந்தார். கூடவே என் இழப்புக்களையும் மீட்டு , தனிமையையும் விரட்டி என் சந்தோஷத்தை மறுபடியும் கொண்டு வர உதவினார். என் கடந்தகால வாழ்க்கையினை அவரிடம் நான் மறைக்கவில்லை. அவரும் அதை புரிந்து கொள்பவர் போல் இருந்தார். நானும் என்னை கிரிக்காக மாற்ற முயற்சித்தேன். இயல்பாக ஒத்துப் போகும் என் குணத்தை தவறாகப் புரிந்து கொண்ட கிரி நாளடைவில் என் குணத்தையே தனக்கு ஏற்ற விதத்தில் மாற்ற முற்பட்டார். என் ஒவ்வொரு செய்கையிலும் குற்றம் கண்டு அதை அப்படிச் செய்யாதே எனக் குறை கூறுவார். நானும் அடுத்த தடவை முயற்சி செய்கிறேன் என்று கூறி அதை அத்துடன் முடித்து விடுவேன். இப்படி எத்தனையோ........ என் ஆசைகள், தேவைகள் எல்லாமே தனக்குத் தெரிந்தது போல், தானே முடிவு செய்ய வேண்டும் என்பது போல நடந்து கொள்வார்.இது எனக்குப் பிடிக்கவில்லை, இந்த வாழ்க்கையில் என் விருப்பு வெறுப்புகளுக்கும் இடம் உண்டு எனக் கூறும் போது கிரிக்குக் கோபம் தான் வந்தது . கிரி படித்தது வெறும் புத்தகம் தான் என்பது அப்போது தான் தெரிந்தது .

திருமணமாகி இன்னும் ஒரு வருடம் கூட பூர்த்தி அடையவில்லை அதற்குள் சின்னச் சின்ன விசயங் களையெல்லாம் பெரிதுபடுத்தி ஒருவருக்கு ஒருவர் சச்சரவு ஏற்படுகின்றது . நானும் நிறைய களைத்து விட்டேன். இப்போ எல்லாம் வீற்றோவின் நினைப்பு அடிக்கடி எட்டிப்பார்க்கும். என் வலிக்கு மருந் தாக வந்த கிரி என் காயத்தை ஆழமாக குடைந்து விட்டார். அடிக்கடி கிரியை வீற்றோவுடன் சம்பந் தப்படுத்திப் பார்ப்பேன். வீற்றோ எப்போதுமே என்னைப் புரிந்து கொள்வான். என்னை நானாக ஏற்றுக் கொண்டவன். கிரி எப்பொழுதும் எதிலும் குறை காண்பவர். அவற்றை புரிந்து கொண்டாலும் மதிப்பு கொடுக்க மாட்டாதவர். தனக்கென ஒரு வட்டத்தைக் கீறி அதற்குள் உள்ளவர்களை மட்டுமே ஏற்றுக் கொள்கிறவர். அதற்கு வெளியே உள்ளவர்களை எல்லாம் ஏற்றுக் கொள்வதாக இல்லை. நானும் அவர் கீறிய வட்டத்திற்கு வெளியே உள்ளவள்.
எனக்கும் கிரிக்கும் இடையில் இருக்கும் இடைவெளி அதிகரித்துக் கொண்டேபோகிறது . அனேக மான நாட்களில் நமக்குள் பேசுவதற்குக் கூட எதுவுமே இல்லாதது போய்விடுகிறது . அப்படியே பேசினாலும் அது வாக்குவாதத்தில் முடிகிறது . நம் உறவினருக்கும் சமுதாயத்திற்கும் அழகான , அறி வான , படித்த பொருத்தமான ஜோடி. ஆனால் நம் நியவாழ்க்கையில் ......? இந்தத் திருமண வாழ்க்கை யில் எத்தனை காலம் என்னால் வாழ முடியுமோ.....?

அன்று காதலான மனதிற்கும் இன்று கல்யாணமான உடலிற்கும் எப்போ விடுதலை?

– முற்றும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் கருத்தென்ன...?

சஞ்சீவீ...

இன்று டென்மார்க்கில் அதிகளவிலான விவாகரத்துக்கள் நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த விவாகரத்துக்கள் தனித்து டெனிஸ் மக்களை மாத்திரமல்லாது, டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழுகின்ற பல வெளிநாட்டு மக்களையும் பாதிப்படையச் செய்கின்றது.

விவாகரத்துச் செய்து கொண்டவர்கள் தாங்கள் ஏன் செய்து கொண்டோம்,ஏன் செய்து கொள்கிறோம் என்பதற்கு பல காரணங்களை முன்வைத்து தங்களைத் தாங்கள் (கணவன்– மனைவி) நியாயப்படுத்துகின்றார்கள்,

ஒரு திருமண முறிவுக்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் பொதுவான காரணங்கள் எதுவாய் இருக்கலாம், என்ற ஒரே கேள்வியை பல வித்தியாசமான கருத்துடையவர்களிடம் கேட்டோம். அவர்களது கருத்துக்களையே இங்கு பிரசுரிக்கின்றோம்.

கேட்கப்பட்ட கேள்வி இதுதான்: தற்போது டென்மார்க்கில் நடைபெறும் அதிகமான விவாகரத்துக்கள் பற்றிய உங்கள் கருத்தென்ன.........?

JOHN CRISTIAN
Bibliotekar
(நூல்நிலையப் பொறுப்பாளர்)

விவாகரத்து என்பதே பிழையான ஒன்று தான்.இப்படியான ஒரு முறை அல்லது ஒருவழி இருப்பதால் பல பேர் சின்னச் சின்ன பிரச்சினைகள் ஏற்படும் போது அதைத்தீர்த்து விடமுனையாமல் விவாகரத்துச்செய்கின்றார்கள். எனக்குத்தெரிந்த பல நண்பர்கள் ஏதேதோ காரணங்களை முன்வைத்து விவாகரத்துச் செய்துள்ளார்கள். ஆனால் சில நாட்களின் பின்னர் அவர்களின் வாழ்க்கையில் எந்தவிதமான சந்தோசமும் இல்லாமல் இருப்பதோடு கவலையுள்ளவர்களாக இருப்பதையே என்னால் கண்டுகொள்ள முடிகிற[illegible]. ஆகவே விவாகரத்து என்பது தேவையில்லாத ஒன்றாகவே எனக்குத் தென்படு[illegible]ரச்சினைகள் தோன்றுமிடத்து கணவனும், மனைவியுமாகச் சேர்ந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்த டெனிஸ் சமூகத்தினர் போல் பல வெளிநாட்டவர்களும் தங்கள் திருமண உறவை முறித்துக் கொள்வதைக் கேள்விப்படும் போது மிகுந்த வேதனையாய் இருக்கின்றது.

அ.கரன்
குழந்தைகள் பராமரிப்பு உதவியாளர்.

விவாகரத்துக்களுக்கான காரணங்கள் ஒன்றல்ல..... இரண்டல்ல..... ஆயிரம் காரணங்களை முன்வைக்கின்றார்கள். முன்வைப்பவர்கள் தங்கள் தங்கள் மனநிலைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்ற பிரச்சினைகளையே முன்வைக்கின்றார்கள். பெரும்பாலானோர் தங்களின் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி கொஞ்சமும் கூட சிந்திப்பதில்லை.

ஒரு உதாரணம், நான் வேலை செய்யும் இடத்தில் ஒரு குழந்தை ஏறக்குறைய 5,6 வயது மதிக்கத்தக்கவன். பார்ப்பதற்கு நல்ல அழகானவன், திடகாத்திரமானவன், மிகவும் கெட்டிகாரனும் கூட. எப்பொழுதும் அவனைச் சுற்றியே மற்றக் குழந்தைகளும் சேர்ந்து திரிவதை அவதானிக்கலாம்.

ஒரு கொஞ்சக் காலத்துக்குள் சில பிரச்சினைகளின் காரணத்தினால் அவனது பெற்றோர்கள் விவாகரத்துச் செய்து விட்டதால், அந்தக் குழந்தையில் ஏற்பட்ட மாற்றங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. முன்பு போல் இல்லாமல் முரட்டுத்தனமான குணங்களும் தோன்றி, எல்லோருடனும் எதற்கெடுத்தாலும் கோவிப்பதும், சண்டைபிடிப்பதும், விளையாட்டுச் சாமான்களை உடைப்பதும் அவனது நாளாந்த செயற்பாடாகி விட்டதால், அவனது நண்பர்கள் எல்லோரும் அவனை விட்டு விலகி விட்டார்கள்.

இன்று அந்தப் பிஞ்சுக்குழந்தை ஒரு மனநோயாளியாகி தனித்து நின்று மண்ணோடும் மரத்தோடும் கதைத்து விளையாடுகின்றான். இதைப்பார்த்து கண்ணீர் கூட வடித்திருக்கின்றேன். விவாகரத்து என்பது தேவை தானா........?

பெற்றோர்கள் குழந்தைகளின் நலன்களையாவது கவனத்திற் கொண்டு ஒற்றுமையாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

JETTE MIKAELA

புகைப் படப்பிடிப்பாளர்.

ஏன் விவாகரத்துச் செய்து கொள்ளுகின்றார்கள்.......?அங்கு இங்கு என்று கண்டவுடன் பழகுகின்றார்கள். ஒரு குறுகிய கால எல்லைக்குள் திருமணத்தைச் செய்து கொள்ளுகின்றார்கள். பிரச்சினைகள் ஏற்படும் போது எதையுமே சிந்திக்காமல் விவாகரத்தைச் செய்து கொள்ளுகின்றார்கள். திருமணம் முடிப்பதற்கு முன்னர், ஒருவரைப்பற்றி ஒருவர் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.தெளிந்திருக்க வேண்டும். அப்படியிருந்தால் விவாகரத்து என்பது தேவையில்லாத ஒன்றாகிவிடும்.

மா.நந்தகுமார்.

தளபாட இயந்திர இயக்குனர்.

குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் கூடுகின்ற போது, விவாகரத்துக்கள் ஏற்படுகின்றது. குறிப்பாக இந்த நாட்டில் பெண்களுக்கு அதிகமான சுதந்திரம் இருப்பதால் உடனே செய்து கொள்ளுகின்றார்கள். ஏனென்றால் பெண்கள் தான் கூடுதலாக தங்கள் வாழ்க்கையை மாற்ற வேண்டும் என விரும்புகின்றார்கள். அதற்கு நியாயங்களும் இருக்கலாம். இந்தச் சமூகத்தில் ஆண், பெண் என இருபாலரும் வேலைக்குச் செல்ல வேண்டிய தேவைகள் இருப்பதாலும், குடும்பப் பொறுப்பில் சரியாக இருவரும் ஒத்துழைக்க முடியாததாலும் பிரச்சினைகள் தோன்ற, விவாகரத்துக்கள் ஏற்படுகின்றது.

METTE HOMMELHOFF HANSEN.

கலாச்சார இல்லப் பொறுப்பாளர்.

இருக்கின்றதை விட, இன்னொன்று நல்லது என நினைப்பதாலும், இருப்பதை வைத்து திருப்த்தியடைய முடியாமல் இருப்பதாலும், ஒருவரை ஒருவர் மதிக்கத் தெரியாத

www.tamilarangam.net

நிலமை ஏற்படுகின்ற போது விவாகரத்துக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அமைகின்றது. அதாவது இப்படியான தன்மைகள் தோன்றுகின்ற போது ,அல்லது இருக்கின்ற போது சின்னச் சின்னப் பிரச்சினைகள் தோன்றத் தோன்ற இவர்கள் மத்தியில் இவை பெரிதாகவே எப்போதும் தென்படும்.

இ. உதயகுமார்.
இயந்திர இயக்குனர்.

விவாகரத்து என்பதில் நல்லதும் இருக்கின்றது. கெட்டதும் இருக்கின்றது. ஒரு குடும்பத்தில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டு இருவராலும் எந்த விதத்திலும் ஒத்துப் போக முடியாவிட்டால், அவர்கள் இருவரும் விவாகரத்துச் செய்து கொள்வதில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. ஆனால் குடும்பத்தில் குழந்தையுள்ளவர்கள், குழந்தைகளின் நலன்களுக்காக, எதிர்காலத்துக்காக விவாகரத்துச் செய்யக் கூடாது.

சட்டங்கள் எதற்கும் வழிவகுக்கும் என்பதற்காக பிரச்சினைகள் தோன்றியவுடன் அதைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் விவாகரத்துக்கு நாடுவதும் பிழையானது. கூடுமானவரை தாங்களாகவே தீர்த்துக் கொண்டால் சந்தோசம் தானே.

MOGENS LYHNE
REGNSKABSFORE
(கணக்காளர்.)

இது ஒரு பிரச்சனையான கேள்வி. டென்மார்க்கில் இது சுகமானது. இலகுவானது. இவருடன் இந்த வாழ்க்கை போதுமானது என நினைப்பவர்கள் இந்த முடிவை எடுக்கின்றார்கள். முற்காலத்தில் திருமணம் செய்தவர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதும் ஒன்றாகவே வாழ்ந்தார்கள். ஆனால் இப்போது அப்படியில்லை. பல இளம் குடும்பத்தினர் தங்களைத் தாங்கள் தெரிந்து கொள்ளாத நிலையில் உடனே தங்கள் உறவை முறித்துக் கொள்கின்றார்கள்.

இன்று டென்மார்க்கில் இது ஒரு சாதாரண நிகழ்வாகி, இது ஒரு பெரிய பிரச்சினையே இல்லை என்பது போலாகி விட்டது. இது இன்று டெனிஸ் மக்களை மட்டுமல்லாது பல வெளிநாட்டுக்குடும்பங்களையும் பாதித்து வருகின்றது என அறியும் போது மிகவும் வேதனையாகவும் இருக்கின்றது.

நிர்மலன்
மாணவன்.

பாலியல் பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக பல குடும்பங்களில் இருப்பது பல பேருக்குத் தெரியாமல் இருக்கின்றது. பாலியல் ரீதியாக தன்னோடு இருப்பவரால் திருப்த்தியடைய முடியாத நிலையில், இன்னொரு கள்ளத் தொடர்பை ஏற்படுத்தி ஏற்கனவே இருந்த உறவை முறித்துக் கொள்வதற்காக விவாகரத்தைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் மத்தியில் பாலியல் உணர்வு மேலோங்குவதால் தங்கள் குழந்தைகளின் எதிர்கால வாழ்வு,மற்றொருவர் மீது வைத்திருந்த அன்பு,பாசம்,நட்பு எல்லாவற்றையும் மறைத்து விடுகின்றது.

பலபேர் இந்தப் பிரச்சினையை வெளியில் சொல்லாமல் பொய்யான வேறு காரணங்களை முன்வைத்தே விவாகரத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றார்கள். தமிழ்க்குடும்பங்களாயிருந்தாலென்ன...?டெனிஸ்க் குடும்பங்களாயிருந்தாலென்ன...,? அல்லது வேறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிநாட்டுக் குடும்பங்களாயிருந்தாலென்ன,,,,,?பாலியல் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாகவே இருக்கின்றது.

## ANNE ELLEGAEARD PETERSEN.

எழுத்துவினைஞர்.

விவாகரத்து என்பது கூடாத ஒரு விடயம் என்பது என் கணிப்பு. இருந்த ஒரு உறவுக்கு முற்றுப்புள்ளி வைப்பது தான். ஒத்துவராத இருவர் விவாகரத்துச் செய்யத்தான் வேண்டும் பிழையில்லை. ஆனால் பிரச்சினைகள் வரும் வேளையில் பொறுமையாக இருந்து தீர்த்துக் கொள்ள முயற்சித்தால் சந்தோசமாக வாழலாம். குழந்தைகளுள்ள பெற்றோர்கள் என்ன தான் பிரச்சினைகள் தோன்றினாலும் குழந்தைகளின் நலனை மனதிற் கொண்டு விவாகரத்து செய்யவே கூடாது.

## ALI

சமையலக உதவியாளர்.

இரண்டு பேரும்தங்களைத் தாங்கள் புரிந்து கொள்ளாத நிலையில் விவாகரத்துக்கு முன்வருகின்றார்கள். நான் என்ற தன்மை மேலோங்க, மேலோங்க அன்பு, இரக்கம், பரிவு எல்லாம் அற்ற நிலையில் தன்னுடைய சுய நலத்திற்காக விவாகரத்தைச் செய்து கொள்கின்றார்கள். இதனால் மற்றவரும் அவரோடு சேர்ந்தவர்களும் பாதிப்படைகின்றார்கள்.

பல வெளிநாட்டவர்களும் இங்கு வந்தவுடன் இந்த நாட்டு மக்களைப் போல் வாழப்ப ழகிக் கொண்டு,தாங்கள் வாழ்ந்து வந்த முறைகளை மறந்து, அதாவது நாங்கள், எங்கள் என்ற நிலைப்பாட்டை விட்டு நான், என் என்பதற்கே முக்கியம் கொடுக்கின்றார்கள். இதனால் பல வெளிநாட்டுக் குடும்பங்கள் மத்தியிலும் விவாகரத்து மலிந்து கிடக்கின்றது.

## ANNA MARIE.

விற்பனையாளர்.

விவாகரத்துக்கான சட்டம் மிக இலகுவாக இருக்கின்றது. பெரும்பான்மையோர் சின்னப் பிரச்சினைகள் தோன்றியவுடன் அதைத் தீர்த்து விட முயலாமல் அதை மேலும் பெரிதாக்கி விவாகரத்து வரையில் கொண்டு போகின்றார்கள். பின்னர் அதையிட்டுக் கவலையடைகின்றார்கள். இளம் சமுதாயம் தான் இன்று கூடுதலாக விவாகரத்தைச் செய்து கொள்ளுகின்றார்கள்.

இன்று எத்தனையோ குடும்பம் திருமணம் முடித்து 25வது வருடக் கொண்டாட்டம் 30வது, 50வது எனக் கொண்டாடுவதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இவர்கள் மத்தியில் பிரச்சினைகள் தோன்றியிருக்காதா.....? சிறிது சிந்தித்துப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

## தியாகேஸ் வசந்தகுமார்.

ஆசிரியை.

எங்கள் நாட்டை விட இந்த நாட்டில் இதற்கான சட்டம் மிகவும் இலகுவாயிருக்கின் றது. இங்கே தனிக் குடும்பங்களாயிருப்பதால் பிரச்சினைகள் தோன்றியவுடன் அதைத் தீர்ப்பதற்கு சட்டத்தையே நாடுகின்றனர். ஆனால் எங்கள் நாட்டில் கூட்டுக் குடும்பங்களாயிருப்பதால் பிரச்சினைகள் தோன்றினாலும் பெற்றோராலும் பெரியவர்களாலும் ஏதோ ஒரு வகையில் அது தீர்க்கப் படுகின்றது. எங்கள் நாட்டிலும் விவாகரத்து இருக்கின்றது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தான் இல்லையென்று சொல்ல வரவில்லை. ஆனால் இந்த நாடு போல் அல்ல.

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் தன்மையும் ஒருவரையொருவர் மதிக்கும் தன்மையும் இருக்குமானால் விவாகரத்து என்பது அவசியம் இல்லாத ஒன்றாகி விடும். எங்கேயும். விவாகரத்தினால் பெரிதும் பாதிப்படைவர்கள் குழந்தைகள் என்று சொல்வதைப் போல் எங்கள் நாட்டிலும் நாளாந்தம் சண்டைப்பட்டு சண்டைப்பட்டு ஒற்றுமையாயிருக்கும் பெற்றோராலும் பல குழந்தைகள் பாதிப்படைந்திருக்கின்றார்கள். பாதிப்படைந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

JAN PETRSEN.
வாத்திய இசைக் கலைஞன்.

புதிதாய் ஒன்றைத் தேடிக் கொள். உடை புதிது.... உணவு புதிது.... கார் புதிது.... எல்லாம் புதிதாய் மாற வாழ்க்கை ஏன்.....? புதிதாய் மாறக் கூடாது.

இப்படி நினைப்பவர்கள் புதிய ஒரு வாழ்க்கைக்காக விவாகரத்தைச் செய்து கொள்ளலாம்.

நன்மை தீமை என்பது பின்னர்.

ஐங்கரன்.
MONTOR.( பொருத்துனர்.)

கருத்து ரீதியாக, வாழ்வு ரீதியாக வெறுப்படைந்தவர்கள், சலிப்படைந்தவர்கள் விவாகரத்தைச் செய்து கொள்கின்றார்கள். என்னுடைய சுதந்திரம் பறி போகின்றது. எனக்குச் சுமை கூடுகின்றது என நினைப்பதால் விவாகரத்துக்கள் கூடிக்கொண்டு போகின்றது.

இவற்றை விட பொருளாதார நலன்களுக்காகவும் இன்று மனமொத்து விவாகரத்தைச் செய்து கொள்கின்றார்கள். அதாவது பிரிந்திருப்பவர்களுக்கான அரசாங்க உதவி கூடுதலாக கிடைப்பதால் இதைப் பல பேர் செய்து கொள்ளுகின்றார்கள். இதை அறிந்து பல வெளிநாட்டுக் குடும்பங்களும் விவாகரத்தைச் செய்திருக்கின்றார்கள். இதில் தமிழ்க் குடும்பங்கள் விதிவிலக்கல்ல. பல தமிழ்க் குடும்பத்தினர் சமயரீதியாக, கலாச்சார ரீதியாக திமணத்தைச் செய்து கொண்டாலும் பொருளாதார நலன்களை மனதிற் கொண்டு சட்ட ரீதியாக பதிவுத்திருமணத்தை செய்யாமல் இருப்பது குறிப்பிடத் தக்கது.

---

*இந்தக் கேள்விக்கான பல நபர்களினது ஒரே விதமான கருத்துக்கள் சில இங்கே தவிர்க்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இங்கே பிரசுரிக்கப் பட்டிருக்கும் கருத்துக்களைத் தவிர வேறு ஏதாவது புதிய கருத்துக்கள் , காரணங்கள், இருப்பின் சஞ்சீவிக்கு எழுதியனுப்பி வையுங்கள்.*

*– நன்றி.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*என்று தணியுமிந்த ஆங்கில வேட்கை......*

# வாணி விழா என்ற பெயரில் பிராண்டி விழா.

தமிழரின் கலை, கலாச்சாரத்தை நினைவில் நிறுத்திப் பேணும் நன் நோக்கத்துடன், புலம் பெயர்ந்த எம்மவர் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ச்சங்கம், இளம் சமுதாயத்திற்கு முன்னோடியாக இருந்து நமது கலை,கலாச்சாரத்தினை மதிக்கவும் கற்றுக் கொள்ளவும் உதவுவதை விடுத்து—

சமீபத்தில் தமிழ் பாடசாலை ஒன்றில் நடை பெற்ற சரஸ்வதி பூசையில் சங்கத்தின் பொறுப்புள்ள அங்கத்தினர் சிலரின் வேதனை தரும் செயற் பாடுகளில்,குறிப்பாக மேற்படி சமய நிகழ்வில் மதுபானம் பாவித்தமை சமூகமளித்த பலரினையும் முகம் சுழிக்க வைத்தது. இது மிகவும் வன்மையாக கண்டிக்கப்படவேண்டிய விடையமாகும்.இவ்வாறான தவறுகளுக்கு மென்மேலும் இடமளிப்பது கல்லூரியின் வளர்ச்சியினையும்,அதனூடு வழிநடத்தப்படும் இளம் சமூகத்தினதும் – நலன் விரும்பிகளினதும் எதிர்காலத்தை மிகவும் பாதிக்கும் என்பதை வலியுறுத்துவதுடன், நாமும் இச் சங்கத்தின் அங்கத்தினராக இருந்துகொண்டே இவ்வாறான இழிசெயல்களை பார்த்தும் பாராமுகமாகவோ,உடந்தையாகவோ இருக்க விரும்பாத காரணத்தால்,மேற்படி சங்கத்தின் அங்கத்தவர் சிலர் எதிர்ப்புப் பிரேரணை சமர்ப்பித்திருந்தும்,சென்ற மாத சங்கக்கூட்டத்தில் அப்பிரேரணையை நிராகரித்தும்,மதுபானம் பாவிக்கலாம் என்று ஏகமனதாக முடிவெடுத்துள்ளதாகத் தெரியக்கிடக்கிறது. சங்கத்தின் செயலாளர் இந்து மதத்தையும்,தமிழ் கலாச்சாரத்தையும் ஏளனம் செய்யும்வகையில் 'உங்கள் இல்லத்தில் தண்ணியடிக்கும்போது சாமிப்படங்களை சாக்குப்பையில் போட்டுவிட்டா குடிப்பியள்?'என்று கூறி எள்ளி நகைத்தார். 'பேய்கள் அரசாண்டால் பிணம் தின்னவா கூறவேண்டும்' என்ற பாரதியின் கவிதை நினைவுக்கு வருகிறது. இவர்களின் இழிசெயலை சகிக்காது சில மானமுள்ள அங்கத்தவர்கள் பதவியிலிருந்து விலகியும்,வெளிநடப்பும் செய்தனர்.

* *மேற்படி அசம்பாவிதம் பற்றி தலைவரிடம் கேட்டபோது'இதுதனிப்பட்டவரின்விருப்பம் நான் அதை ஒன்றும் செய்ய முடியாது' என்றார்.செயலாளர்: 'சரஸ்வதி பூசையன்று சிலர் இறைச்சிசமைக்கவேண்டுமென்றும், சிலர் கூடாது என்றும், சிலர் மதுபானம் தேவை என்கிறார்கள்? நான் என்ன செய்ய எல்லோரையும் மகிழ்ச்சியாக வைக்க முடியாது என்றும் பெரும்பாலான அங்கத்தவர்களின் விருப்பத்தின்படிதான் செய்தோம்' என்றும் கூறினார்.*
* *நம் நாட்டில் தினம் உணவு உடைக்கு அவதியுறும் குழந்தைகளுக்கு என்ன வகையில் உதவலாம்? என்ற கேள்விக்கு பொருளாளர் பணம் வந்தபின் அதைப்பற்றி யோசிக்கலாம் என்றார்.*
* *பாடசாலைக்கு வரும் மாணவர் தொகை குறைந்து வருகிறது என்ன செய்யலாம்?என்ற கேள்விக்கு தலைவர் 'அவர்கள் சந்தித்துக் கதைக்க பாடசாலையில் இடம்வழங்குவதுடன், மாதம் ஒரு முறையாயினும் டிஸ்கோ வைக்கலாம்' என சங்கத்தில் முடிவு செய்துள்ளதாக கூறினார்.*
* *முன்னாள் தலைவரின் மனைவியும், அங்கத்தவரும் ஆகவுள்ளவரிடம் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல்' அங்கத்தவர் தொகையும், பாடசாலையில் சிறார்களின் தொகையும் குறைந்து வருகிறதே! என்ன செய்யலாம் என கேட்க, அவர் அதற்கு'கனக்க தமிழ்ச்சனம் வந்து சேர்ந்தால் பிரச்சனை, அதோடு அகதிளும் வந்து சேர்ந்து கொள்வார்கள்' என்றார்.*

(தொடர்ச்சி பக்கம் 29)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குர்திஸ்தான் : விடுதலையும் கவிதையும்...

– யமுனாராஜேந்திரன்.

நாம் வாழும் இன்றைய உலகில் விடுதலை என்ற கருத்தமைவு ஆழ்ந்த புரிதலுடன் விரிந்த விவாதத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட வேண்டியது. புரட்சிகர இலக்கியங்கள் – விடுதலை போராட்ட இலக்கியங்கள் – விடுதலைப் போராட்ட இயக்கங்களின் இலக்கியங்கள் பெறும் அர்த்தம் அதன் பழைய அர்த்த தளங்களில் இருந்து இன்று நகர்ந்துவிட்டது. கவிதை பற்றியது என் அழுத்தம் என்பதால் கவிதையின் தளத்தில் நடந்த விசயங்கள் பற்றி மட்டுமே பேச விழைகிறேன். எனது புரட்சி என்ற மயக்கோவ்ஸ்க்கியின் புரட்சிகரக் கவிதைகளும், பிற்காலத்திய அவரது தற்கொலையும் நாம் அறிந்தவைதான். அக்மதோவா கவிதைகள் ரஷ்யப் புரட்சியின் பிறிதொரு முகத்தைக் காண்பிப்பவை பிரக்சனதும்,கார்ஸியா லோக்காவினதும் கவிதைகள் பாசிசக் காலகட்டத்தின் எதிர்வினையானவை.

1980 களின் பின்னான சமூகக் கொந்தளிப்பு பற்றி கவிதைகள் கிழக்கு ஐரோப்பிய சமூகங்களிலிருந்து வருகின்றன. பெண்நிலை வாதம் ஒரு கோட்பாடாக நிலை பெற்ற பின்னால் ஐரோப்பிய நாடுகளினால் அதே வேறொரு முகத்துடன் காலனித்துவ எதிர்ப்பு – பெண்ணுரிமைக் குரலாக மூன்றாம் உலக நாடுகளிலிருந்து தொகுப்புகள் வருகின்றன. **LOVERS AND COMRADES** எனும் இலத்தீனமெரிக்கப் பெண்களின் தொகுப்பு **WE SINFUL WOMEN** எனும் பாகிஸ்தான் பெண்களின் தொகுப்பு **WOMEN WRITING AFTER INDEPENDENCE** எனும் இந்தியப்பெண்கள் தொகுப்பு சொல்லாத சேதிகள் எனும் ஈழப்பெண்களின் தொகுப்பு போன்றவற்றை இவ்வகையில் குறிப்பிடலாம்.

தமிழில் தேச விடுதலைப் போராட்டமும் ஒடுக்கப்பட்ட மனிதர்களும் பற்றியதுமான முக்கியமான தொகுப்புகள் இந்திரன் தொகுத்த ஆபிரிக்க வானம்,

www.tamilarangam.net

எஸ்.வி.ஆர்,கீதா தொகுத்த இரு தொகுதிகள், நான் தொகுத்த 5 தொகுதிகள், நுஃமான் தொகுத்தவை ஈழத்துக் கவிதைகளின் தொகுப்பு எனச் சொல்லிச் சொல்லலாம்.நிறைய இலத்தீனமெரிக்க, ஆபிரிக்க, பிலிப்பைன்ஸ், அராபிய நாடுகளின் கலகக் குரல்களும் ஆங்கிலத்தில் தொகுப்பாகக் கிடைக்கிறது. இத் தொகுதிகளில் ஒன்றுதான் **LONDON KURDISTAN SOLIDARITY COMUNITTEE** தொகுதிக்கும், **AUTROLOGY OF CONTEMPORARY KURDISH POETRY.** இத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் 11 கவிகளும் ஆண்கள்தான். இது விடுதலை இயக்கங்களில் பெண்களின் பங்கெடுப்பு பற்றிய பிரச்சினை மட்டுமல்ல அவர்களது வெளியீட்டுச் சுதந்திரம் மரபார்ந்த சமூகத்தை பிதிர்த்து நிற்க வேண்டிய பிரக்ஞை பற்றியதுமாகும். இக் கவிதைகளின் ஊற்று எல்லா மகத்தான படைப்புகளின் ஊற்றுக் கண்ணாகத் திகழ்கிற விடுதலை நோக்கிய எதிர்ப்புணர்வும் சக மனிதனை நோக்கிய மானுட அன்புந்தான். அரசியல் கோசங்களும் வீராவேசமான சொற்களும் இத்தகைய வெளிப்பாடுகளில் காலாதி காலம் தவிர்க்க முடியாமல் இருந்தே வந்திருக்கிறது. புரட்சியின் புறத்தோற்றங்கள் பற்றிய வீராவேசம் வார்த்தைகளில் தேங்கிவிடுகிறது. மானுட உள்ளடக்கம் பற்றிய விகாரங்கள் காலத்தைக் கடந்து விடுகிறது. நகர்த்தி விடுகிறது. நாடு இனம் மொழி வரலாறு போன்றவற்றைக் கடந்து பிற்காலத்துக்குமான மனித இருத்தலின் மேன்மையை உன்னதப் படுத்தும் எதிர்ப்புணர்வும் துக்கமும் அன்பும் சில கவிதைகளில் உறைந்து விடுகிறது. அத்தகைய கவிதைகளை மட்டுமே நான் தேர்ந்திருக்கிறேன்.குர்திஸ்த்தான் ஈழமும் ஆகிறது. ஈழம் இங்கு ஒரு தலித் கிராமமும் ஆகி விடுகிறது.

இத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் கவிகள் அனைவருமே உயிரோடு இருப்பவர்கள்,மரபை முறித்துக் கொண்டவர்கள்.பின்கிமுர் முன்னுரை எழுதிய **SHERI LAIZER** கவிகள் குர்திஸ்த்தானின் பிளவுண்ட பகுதிகளான துருக்கி,ஈரான்,ஈராக்,சிரியா போன்றவற்றில் அல்லது புகலிட நாடுகளில் அகதிகளாக வாழ்பவர்கள். குறிப்பிட்ட நான்கு நாடுகளிலுமே காதலையும்,பெண்களையும் சுற்றிய குர்திஸ் இசை,பாட்டு,நடனம் போன்றவை ஓரளவு இயந்து அனுமதிக்கப்பட்டுள்ளன. அரசியல் பிரக்ஞையும் நவீனத்துவ சிந்தனையும் கொண்டு படைப்புக்கள் அனைத்துமே தடை செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலான படைப்பாளிகள் புகலிட நாடுகளிலேயே ஸ்வீடன், ஆஸ்த்திரேலியா, இங்கிலாந்து, ஜெர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். முன்னுரையாளர் சொல்கிறபடி ஆங்கில மொழி பெயர்ப்பில் வரும்போதே குர்திஸ் கலாச்சாரத்துக்கேயுரிய தனித்துவமான லயம்,மூல கவிதையின் நுண்ணுணர்வு போன்றவை சிதறி விடுகின்றன. ஆனாலும் உணர்ச்சிகளும்,கற்பனை–களும், பிரதிமைகளும் உள்ளார்ந்து நம்மை சத்தியமான குர்திஸ் இதயம் நோக்கி அழைக்கிறது.

குர்திஸ்தான் பல்வேறு பிரதேசங்களுக்கான பிரத்யேகமான வழக்கு மொழிகளைக் கொண்டிருக்கிறது.**KURMANJI, SORANI** போன்றவை பிரதேச வழக்கு மொழிகள். இவைகளில் இருந்தான ஒரு பொது மொழியும்,கலாச்சாரத்தையும் அம்மக்கள் எட்டியிருக்கிறார்கள். தமது தனித்துவ கலாச்சாரப் பண்புகள் பேணும் ஒரு நாட்டுக்காகவும் போராடி வருகிறார்கள். இங்கிலாந்தின் பிரபல நாடகாசிரியர் ஹரல்ட் பின்ட்டர் இவர்களது பலமான ஆதரவாளர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அவர் சொல்கிறபடி இக்கவிதைகள்: "துன்பத்தையும்,வலியையும் மட்டும் சொல்பவை அல்ல, எதிர்ப்புணர்வை, அழிவுக்கெதிரான வாழவேண்டும் எனும் தீவிரமான நிலைப்பாட்டை வெளியிடுபவை. இக்கவிதைகள் வெளிப்படையானவை, உணர்ச்சி பூர்வமானவை, ஆழமானவை, நம்மை இழுத்துக் கொள்பவை,இவை நேரடியான, உடனடியான அனுபவத்திலிருந்து பிறந்தவை."

1

---

# ஷெர்கோ பெகாஸ்

இவரது தந்தை **Faiq Bokas** குர்திஸ்தானின் புகழ் பெற்ற மூத்த கவிகளுள் ஒருவர். 1940 இல் ஈராக் பகுதியைச் சேர்ந்த குர்திஸ்தானில், சுலைமானியாவில் பிறந்தார். 1965 இல் குர்திஸ் விடுதலை இயக்கத்துடன் இணைந்த இவர் குர்திஸ் வானொலியில் செயலாற்றுகிறார். 1984 – 1987 காலத்தில் விடுதலைப் போராளிகளோடு வாழ்கிறார். 1987 முதல் ஸ்வீடனில் வாழ்ந்து வருகின்றார். சர்வதேச **PEN TUCHOLSKY PRIZE** உம் **FREEDOM OF THE CITY OF FLORENCE** விருதும் பெற்றவர். சமகால குர்திஸ் கவிகளில் பிரபலமான கவி இவர்தான்.



## நிலம்:

மரத்தின் சிறுகொம்பைத் தொட்டேன்
வலியில் நடுங்கியது அது

கிளையில் நான் கைவைத்தபோது
மரஉடல் குலுங்கி அழுதது
முழுமரத்தையும் நான் தழுவியபோது
என் காலின்கீழ் நிலம் நடுங்கியது
கற்கள் வேதனையில் புலம்பியது

இப்போது நான் குனிந்து கைநிறைய
ஒருகைப்பிடிநிறைய மண்ணைச் சேகரித்தேன்
முழு குர்திஸ்தானும் கதறியது.

www.tamilarangam.net

## துப்பாக்கி:

மலைகளைச் சந்தோசப் படுத்துவதற்கா
புல்லாங்குழலாக ஊதுமாறு மரங்கள்
காற்றைக் கேட்டுக் கொண்டன.

மனஞ்சோர்ந்த தோட்டங்களை சிலிர்ப்பூட்ட
அலைக்கைகள் சேர்ந்து நடனமிடுமாறு
நதியை பறவைகள் கேட்டுக் கொண்டன.

கவிதைகளை விடுதலை செய்யும் பொருட்டு
* பெஸமர்க்காக்களின் துப்பாக்கிகளிடம்
நிலம் கேட்டுக் கொண்டது.
இந்த அடர்ந்த இரவுக்குத் தீயிட்டு
சூரியனின் கரங்களில் விழுந்து மரணிக்கும்படி.

* விடுதலைப் போராளிகளை குறிக்கும் குர்திஸ்பெயர்

## எனது தேசத்தில்:

எனது தேசத்தில் செய்தித் தாள்கள்
ஊமையாகப் பிறக்கிறது
வானொலிகள் செவிடாக
தொலைக் காட்சிகள் குருடாகப்பிறக்கிறது.

இவைகள் ஆரோக்கியமாகவும் சுதந்திரமாகவும்
பிறக்க வேண்டுமென
என் தேசத்தில் விரும்புகிறவர்கள்

ஊமையாக்கி அதைக் கொல்கிறார்கள்
செவிடாக்கி அதைக் கொல்கிறார்கள்
குருடாக்கி அதைக் கொல்கிறார்கள்

இதுதான் எங்கள் நாட்டில் நடக்கிறது.

(தொடர்ச்சி பக்கம் 41)

www.tamilarangam.net

## ஒரு சம்பாஷனை :

"எங்கை கண்டு கனகாலம்?
ஆளையே காணமுடியேல்லை? "

"சும்மா இப்படி வந்தனாங்கள். பின்னை....க்
கடை தெருவையும் பாத்திட்டுப் போகலாம்
எண்டு வந்தம் "

"நீங்கள் சும்மா வர மாட்டியள். ஏதன்
அலுவலாத் தான் வந்திருப்பியள். சொல்லுங்
கோ. என்ன விஷயம்? "

"எங்கடை ஊராக்கள் இஞ்சை இருக்கினம்.
சாப்பாட்டுக்கு வரச் சொல்லிச்சினம். அது
தான் வந்திட்டுப் போறம் "

# மனவருத்தங்கள்

-க.ஆதவன்.

"எப்படிச் சாப்பாடு? "

"மீனாட்சி கோயில் பிரசாதம் எண்டால்
நல்லாத் தானே இருக்கும். "

"மீனாட்சி கோயிலோ....? "



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு குடும்பத்தில் ஆண் ஆதிக்கம் செலுத்தினால் சிதம்பரம் கோயில் என்றும், பெண் ஆதிக்கம் செலுத்தினால் மீனாட்சி கோயில் என்றும் சொல்லுவது தமிழர்களின் வழக்கம்.

புலம் பெயர் தமிழர் வாழ்வில் இரண்டு 'பாஷன்'களை நான் கண்டிக்கிறேன்.

1) ஒரு ஆண், மற்றைய ஆண்களுடன் முசுப்பாத்தியில் கதைக்கும் பொழுது- தமது மனைவியரைப் பற்றிக் கதைக்கும் பொழுது, தான் மனைவியைக் கட்டியாளுவதாகவும், ஆகலும் வாய் காட்டினால் பல்லுடைய வெளுத்துப் போடுவன் எனச் சொல்வதும், பெண்ணுக்கடங்கிய புருஷன் தான் என, மற்றைய ஆண்கள் தன்னை நினைத்து விடக் கூடாது என்பதில் அதிக கவனம் செலுத்துவதும் ஒரு 'பாஷன்' ஆக இருக்கிறது.

2) ஒரு பெண்,மற்றைய பெண்களுடன் கதைக்கும் பொழுது தனது புருஷனின் குறைகளைப் பெரிதுபடுத்திக் காட்டுவதும் என்ரை அவரைத் தன்னால் கட்டியாள முடியும் எனப் பெருமையடித்துக் கொள்வதும், எந்தச் சபையென்றும் பாராது புருஷனுடன் வாய் காட்டுவதும் மற்றும் ஒரு 'பாஷன்'.

● ● ●

| | |
|---|---|
| மனைவி அமைவதெல்லாம்<br>கணவன் அமைவதெல்லாம் | இறைவன் (பாஷன்)<br>கொடுத்த வரம் |

இது வேறு விஷயம்
இது பற்றி இங்கே நான் சொல்ல வரவில்லை.

● ● ●

காலங்காலமாக ஆணாதிக்க சமூகத்தின் அடக்கு முறைக் குக்கீழ் இருந்த பெண்ணுக்கு விடுதலை வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை!

ஒரு விஷயத்தை மட்டும் சொல்கிறேன்.

தாயக மண்ணில் " சாதிப் பாகுபாடு " அருகி வருகிறது.

www.tamilarangam.net

ஆனால், புலம் பெயர் தமிழர் வாழ்வில் அது அருகுவதற்குப் பதிலாக முளை விடுகிறது.

இந்த முளை விடுதலுக்கு நீர் ஊற்றுவதில் ஆண்களின் பங்கை விட பெண்களின் பங்கே கூட இருக்கிறது என்பது எனது அவதானிப்பு.

● ● ●

அண்மைக் காலங்களில் எனக்கு மனருத்தத்தையும் வேதனையையும் தந்த முக்கியமான விஷயங்களில் இதுவுமொன்று.

இதனை என்ன செய்யலாம்?

பெண் விடுதலையும் சமத்துவமும் கோரி புதிய சமூகம் ஒன்றை நோக்கி பெண்கள் போராடிக் கொண்டிக்கும் இந்த வேளையில்-

சாதிப் பாகுபாடுகளை மனதில் வைத்து அதற்குத் துணை போகிற பெண்களை என்ன செய்யலாம்?

● ● ●

இந்த மீனாட்சி கோயில்களை என்ன செய்யலாம்.....?

-முற்றும்.

(9ம் பக்க தொடர்ச்சி)

*லண்டனில் இருந்து வந்த குழந்தைகளுக்கு, ஜேர்மன் மொழியும், பிரான்ஸ் மொழியும், சுவீடன் மொழியும், டெனிஸ் மொழியும் தெரியாது .*
*ஜேர்மனில் இருந்து வந்த குழந்தைகளுக்கு, ஆங்கிலமொழியும், பிரான்ஸ் மொழியும், சுவீடன் மொழியும், டெனிஸ் மொழியும் தெரியாது .*
*இதேபோல் சுவீடனில் இருந்து வந்த குழந்தைகளுக்கும் டென்மார்க்கில் வசிக்கும் குழந்தைகளுக்கும் தாங்கள் வாழும் நாட்டு மொழியைத் தவிர வேறொரு மொழியும் தெரியாது .*

***ஆனால் இந்தக் குழந்தைகள் ஒருவருக்கும் தங்கள் தாய்மொழியான தமிழ் தெரிந்திருக்கவில்லை.***

என்னென்று இவர்கள் சேர்ந்து விளையாட முடியும்.....?
குழந்தைகளைப் போல் சோர்வடைந்து நானும் கூட மௌனமாய் ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டேன். ஐயர் வளர்த்த ஓமத்தின் மணம் இன்னும் என் மூக்கில் வந்து துளைத்துக் கொண்டது.

முற்றும்.

www.tamilarangam.net

# யாரோடு நோக....

—பாலமோகன்.

நீங்கள்
நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவீர்கள்
என்ற அறிவிப்பை விடவும்
மழித்த தலையுடன்
லெதர் ஜக்கற் அணிந்த
ஒருவன்
என் கண்ணில் எத்துப்படுவதையும் விடவும்
ஒரு அதிகாலை ரெலிபோன் மணி
என்னை அதிகமாய்ப் பயமுறுத்துகிறது..

இயந்திரத்தின் பின்னிணைப்பிலிருந்து
நான் கழற்றிவிடப்பட்டு
சில மணித்தியாலங்கள் தான் போயிருக்கும்.
எனது உறக்கத்தின் ஒவ்வொரு நிமிடங்களுக்கும்
பெறுமதி அதிகம்.
அறையின் இறுகுச் சூட்டில்
எனது உறக்கம்
ஆழமாய் அறையப்பட்டிருக்கும்.

நித்திரைப் பாயில் வைத்தே அமத்தும்
இந்த கொழும்பு ரெலிபோனுக்கு
விபஸ்தையே கிடையாது .
தனது காலில் தட்டுப்படும் எல்லாவற்றையும்
உதைத்து நொருக்கி
இருளில்
என்னை வந்து உலுக்கி எழுப்புகின்றது .

மொட்டவிழும் போலிருக்கும்
என் சின்னச் சின்ன ஆசைகளைக் கூட
நுனி விரலால் கிள்ளி எறிந்தபடி
கைவீசி வருகின்றது ,
ஒரு குழந்தை போல் .
என்னால் கோபிக்கக் கூட முடிவதில்லை .
கடைவாயால் ஒழுகும் சிரிப்பும்
தேவைகளும்
எனது உழைப்பை அதிகம் கேட்டு
சுற்றி நின்று தொந்தரவு செய்யும்.

www.tamilarangam.net

இனியும் அதை நான் சந்திக்கப்போவதில்லை
என்றிருந்தாலும்
அது என்னை விடுவதாக இல்லை .
எப்போதுமே
"சென்ரிமென்ராக" பேசப் பழகியிருக்கின்றது.
இடையிடையே
தொண்டைக் குழியில் சிக்கிய போர்முள்
விக்கத் தொடங்கும் போதெல்லாம்
அதன் அவஸ்தையை
என்னால் தாங்கமுடிவதில்லை .
சில வேளைகளில்
ஆற அமர என் முன்னால் அமர்ந்திருந்து
நெஞ்சு மயிர் வருடியபடி
இழுத்தடித்துப் பேசிக் கொண்டிருக்கும் .
எனது அவசரத்தைக் கூட
அதனால் புரிந்துகொள்ள முடிவதில்லை .
கோவிலுக்கு ஒரு தேர் செய்துவிடுவது பற்றியோ
மணிமண்டபம் கட்டிவிடுவது பற்றியோ
பேசிக்கொண்டிருக்கும் .

சில வேளைகளில் அது
நிதானமாய் வருவதுபோல
குரல் கொடுத்தபடி வரும் .
எனக்கும் எனது அத்தான்மாருக்கும் இடையில்
கால்மீது கால் போட்டு
அனுபவஸ்தன் போல் அமர்ந்து கொள்ளும் .
அத்தான்மாரின் புதிய விலைகேட்டோ
அல்லது பாக்கி விலை கேட்டோ
பேச்சைத் தொடங்கும் .
போதாததிற்கு தன்னுடன் யதார்த்தத்தை
அழைத்து வருகிறது,
தலையாட்டுவதற்காக .
எனது நியாயங்களை
இருவருமாய்த் தின்று தீர்ப்பது
அத்தான்மாருக்கு மகிழ்ச்சியளிக்கின்றது
எனது சகோதரிகளுக்குங்கூடத்தான் !

காலைப் பொழுது என்னை எடுத்துப்
பிணைத்துக் கொள்வதில் அவசரப் படுத்தும்
நானோ இவர்களுக்கு வழி சொல்லியாக வேண்டும்.
இந்த இழு பறியில்
எனது இடை வெளி நேரங்களும் விழுந்து நொருங்கும்.

www.tamilarangam.net

# கடிதம்...

அன்புடன் சஞ்சீவி ஆசிரியர் குழுவிற்கு,

தாங்கள் அனுப்பி வைத்த சஞ்சீவி 31 கிடைக்கப் பெற்றேன். காலம் தாமதித்து வந்தாலும் சஞ்சீவியில் நிறைய நல்ல விடயங்கள் வெளிவருகின்றது . மேலும் இந்தியத் திரைப்பட படத் தொகுப்பாளர் லெனின் பேட்டி இடம் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது . லெனின் அவர்களை இந்த டென்மார்க் அரசு கௌரவித்தது சஞ்சீவி மூலம் தான் நான் அறிந்து கொண்டேன். இன்னும் பலருக்கு இது புதிய தகவல் என்றே நினைக்கிறேன். இவரது " *நாக் அவுட்* " என்ற படத்தை நாம் எப்படி பெற்றுக் கொள்ளலாம்.

பாட்ஷா , வில்லாதி வில்லன் ..... போன்ற திரைப்படங்களை எடுத்து வரும் வீடியோ வினையோகஸ்த்தர்கள் இப்படியான படங்களையும் வெளியில் கொண்டு வந்து உதவலாமே.....?

அன்புடன்,
அரவிந்.

சென்ற இதழில் " கருக்கலைப்பு , விபச்சாரம் பற்றி ஓர் நோக்கு...." வெளிவந்தது . இது போன்ற விடயங்களை எழுதுவது தமிழ் மக்கள் மத்தியில் பரவலான விவாதத்தை ஆரம்பித்து வைக்குமென எண்ணுகிறேன். மேற்குறிப்பிட்ட கட்டுரை சம்பந்தமாக என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எழுதுகிறேன்.

கருக்கலைப்பு என்ற விடயம் பொதுவாக (சரியோ.பிழையோ) பெண்களின் உடல் நலத்திற்கு எதிரானது . இதனால் முழுதாகப் பாதிக்கப்படுவது பெண்கள் தான். எனினும் கருக்கலைப்பு என்ற இவ்வுருமையை பெண்கள் போராடித்தான் பெற்றார்கள். கருக்கலைப்பு ஒரு கொலை,ஆண்களின் உரிமைக்கு எதிரானது என்று மதவாதிகளும் . பழமைவாதிகளும் முன்னின்று பிரச்சாரம் செய்கின்றனர். இவற்றை பெண்விடுதலை அமைப்புகளும் , பொதுவுடமை இயக்கங்களும் எதிர்த்து வருகின்றனர்.

கருக்கலைப்புக்கு பல காரணங்கள் உண்டு.

1. ஒரு பெண் தானே விரும்பி கருக்கலைப்பு செய்தல்.
2. கணவன் , அல்லது பெற்றோரின் நிர்ப்பந்தத்தில் செய்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. சீரழிவுக் கலாச்சாரத்தில் திளைப்பவர்கள்.

4. பொருளாதார வசதி குறைந்த மக்கள் தவிர்க்க முடியாமல் செய்பவர்கள்.

இதில் முதல் வகையைச் சேர்ந்தவர்கள் தவிர்ந்த ஏனையோர் நிர்ப்பந்தங்களால் கருக்கலைப்பு செய்பவர்கள். இரண்டாவது வகைப் பெண்கள் ஆணாதிக்க சமூகக் கட்டுப்பாட்டை மீறி செயற்பட முடியாதவர்கள்.கணவனுக்கோ,பெற்றோருக்கோ பயந்து போபவர்கள், அவர்களால் அடக்கப்படுபவர்கள். மூன்றாவது வகையினர் பெண்விடுதலை என்பதைத் தவறாகவும்,ஏகாதிபத்திய கலாச்சாரத்தினை உள்வாங்கிக் கொண்டும் சீரழியும் பிரிவினர். இவர்கள் ஒருவகையில் பெண் விடுதலையை எதிர்ப்பவர்கள். நான்காவது வகையினர் பொருளாதாரச் சுமையினைச் சுமக்க முடியாதவர்கள். அண்மையில் தொலைகாட்சியில் இந்தியப் பெண் குழந்தைகள் கருவில் அழிப்பது குறித்த ஓர் நிகழ்ச்சியில் இந்தியப் பெண்களின் பேட்டி ஒலிபரப்பப்பட்டது . அதில் பொருளாதார வளம் குறைந்த தாழ்த்தப்பட்ட மக்கள் கூறிய காரணங்கள் நிராகரிக்க முடியாதவை.

விபச்சாரம் பற்றி எல்லோரும் அறிந்தது தான். ஆணாதிக்கத்தினால் தொடர்ந்து செய்து வரப்படும் பெண்கள் மீதான ஒடுக்கு முறைதான் விபச்சாரம். அருண் எழுதியது போல இதற்கு தனியாகப் பெண்கள் மீது குற்றம் சாட்டிப் பயனில்லை. இச் சமூகம் மாற்றப்பட்டு மாறாக பாட்டாளிவர்க சமுதாயம் அமைக்கப்படுவதன் மூலம் தான் தீர்வு காணப்படும்.

– மாதவி .

---

**அரவிந், மற்றும் அவர் போன்ற ஆர்வமுள்ள வாசர்களுக்காவும் நிறப்பிரிகையில் வெளியான நாக்அவுட் திரைப்படத்தின் விமர்சனத்தை இங்கு வெளியிடுகின்றோம்.**

---

(18ம் பக்க தொடர்ச்சி)

இவைகளை சகிக்க முடியாத எனக்கு பாரதிபாலன் சஞ்சீவியில் எழுதிய கவிதையொன்று:

*"சொந்த ஊரில் எம் சுதந்திரம் போனது...*
*இந்தியாவும் எமை எட்டி உதைத்தது...*
*சேர்ந்து வாழ அகதிகள் நம் அண்ணனா தம்பியா...?*
*இந்த ஊரில் நாம் டிஸ்கோதான் ஆடணும்...*

என்ற வரிகள் மீண்டும் மீண்டும் கண்முன் வந்து போகிறது.

**மாணிக்கம் ஞானகணேஷ்**
**London.**
**22.September.1995**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# நாக் — அவுட்

## உடலின் உயர்வு, உடலின் அழிவு சப்தங்களும் – நிசப்தங்களும்.

– ரவிக்குமார்.



''இந்தப்படம் ஒரு ''ஆண்மையப் பிரதியாக'' இருக்கிறதே'' என்றேன். எப்படி? என்பது போலப் பார்த்தார் லெனின். புதுவைப் பல்கலைக் கழகத்தின் நாடகத் துறைக்கு எதிரே நாற்காலிகளைப் போட்டு அமர்ந்திருந்தோம். சற்றுமுன் பார்த்துவிட்டு வந்த நாக்-அவுட் பற்றியதுதான் இந்தப் பேச்சு.

''படத்தோட கடைசியில் வர்ற பட்டினத்தார் பாடல்தான் படத்தோட அடிப்படையாயிருக்கு. சித்தர்கள் உடம்பை வெறுத்தவங்க மட்டுமில்ல, பெண்களையும் இழிவாப் பார்த்திருக்காங்க. இந்தப் படத்துல பெண்களைப் பற்றிய பதிவு ரெண்டு இடத்துலதான் இருக்கு. மொதல்ல பின்னணியில பேசித் தேய்ஞ்சு போற ஒரு பெண்குரல், ரெண்டாவது அனாதையாகப் பிணம் கிடக்குறப்போ மீன் விக்கிற ஒரு கிழவி. ''சும்மா கெட கெழப் பொணமே''ன்னு அந்தக் கிழவியும் சில நொடிகள்ல படத்துலேர்ந்து துடைக்கப் படுறாங்க. இன்னும் முக்கியமா படம் ஆண்மை, வீரம் இதோட அடையாளமாயிருக்கிற குத்துச்சண்டை அதிலேயும் உலகத்திலேயே 'நம்பர் ஒன்' என்பதுபோல ஒலிம்பிக்ல தங்கப்பதக்கம் வாங்கினவரைப் பத்தியது''.........



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"மதுரையில போயி எல்.ஐ.சியைத் தேடினா கெடைக்குமா" என்றார் பக்கத்திலிருந்த கவிஞர் பரிணாமன் சஞ்சீவியினுடைய முழு வாழ்க்கையையும் காட்டியிருந்தா அதுல அம்மா குடும்பம் இதெல்லாம் வந்திருக்கும் என்பது போல இருந்தது லெனினுடைய பதில்.

குடியரசுத் தலைவர் பரிசு, கெய்ரோவில் பரிசு இப்படியாக தமிழனின் 'பெருமையை' உலகமெல்லாம் பரப்பி வருகிறது இந்தப்படம். லெனின், அவரது அப்பாவின் படத்தைப்போல ஒரு பாசமலர் மாதிரிதான் இருக்கிறார். அன்பும் எளிமையும் மிதக்கிற பேச்சு. இப்போது ஷார்ட்-பிலிம் பண்ணபோகிறேன் என்று ஏகப்பட்ட இளைஞர்களை உசுப்பிவிட்டிருக்கிறது இந்தப் படத்தின் வெற்றி.

புதுவைப் பல்கலைக் கழகத்தில் திரையிடப் படுவதற்கு முந்தியநாள் இரவு, அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்க மாநாட்டில் இந்தப் படம் திரையிடப்பட்டது. வர்க்கப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டுள்ள அந்த சங்கத்தினர், அரங்கு அதிர கைதட்டி படத்தையும், இயக்குனர் லெனினையும் பாராட்டினர். வணிக சினிமாவை ஆமாத்தானதென விலக்கும் தரப்பினரிடையேதான் இந்த படம் அதிக வரவேற்பைப் பெற்றுவருகிறது. இத்தகைய பாராட்டு இன்றைய சூழலினுடைய ஆபத்தைக் குறியீடாக்கி நிற்பதாக எனக்குப் படுகிறது.

நாக் - அவுட்டுகள் இருவேறு இடங்களில் தொடங்கி இருவேறு இடங்களில் முடிகிற இரண்டு படங்களை நான் பார்த்தேன்.

பெரியாழ்வாருக்கும், ஜாதாவுக்கும் சமர்ப்பணம் செய்வதில் தொடங்கி, புதைகுழியின்மேல் 'சூப்பர் இம்போஸ் செய்யப்பட்ட சஞ்சீவியின் இளம்வயது உருவம் பார்வையாளர்களை நோக்கி குத்துவதாக ஒரு படம் முடிகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பாவிடம் குத்துச்சண்டை பழகும் சிறுவன் வரும் காட்சியில் தொடங்கி பட்டினத்தார் பாடல் வரிகளில் இன்னொரு படம் முடிகிறது.

முதல்படம் - இந்த தேசத்துக்கு பெருமைதேடி தந்தவர்களை கவனிக்காமல், கௌரவிக்காமல் விட்ட நன்றிகெட்டதனத்தை விமர்சிக்கிறது. அனாதையாக சாகவிட்டு அப்புறம் நினைவுச் சின்னம் எழுப்பும் போலித்தனத்தை நையாண்டி செய்கிறது. (கருப்பு வெள்ளையில் இயங்கும் படம் கடைசிக் காட்சியில் கலருக்கு மாறுவதன்மூலம் சஞ்சீவி பற்றி பேசப்படும் புகழ்வார்த்தைகள் வண்ணப்பூச்சுகளென்பதாக அர்த்தம் பெறுகிறது) சமூகத்தின் முகத்தில் குத்துவது சஞ்சீவி மட்டுமல்ல, படத்தின் ஆசிரியரும் தான். படத்தை பெரியாழ்வாருக்கும், ஜாதவுக்கும் சமர்ப்பித்ததன் மூலம் படத்தின் ஆசிரியர் பழியிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்.

இரண்டாவது படம்-உடலின் நிலையாமையை சொல்கிறது. பயிற்சி செய்து வலுவேற்றி பதக்கங்கள் வென்று வந்த உடல் ஓய்ந்து உலர்ந்து ஈ மொய்க்கக் கிடக்கிறது. குத்துச் சண்டை களத்தில் பலரை வீழ்த்தியவன் புதைக்குழிக்குள் உருட்டித் தள்ளப்படுகிறான். பொன்னுக்கு (ஜரிகை, பதக்கம்) இருக்கும் மரியாதை அவனுக்கில்லை. புதைத்த இடத்தில் ஆடுகள் மூத்திரம் பெய்கின்றன. மனிதர்கள் மலஜலம் கழிக்கிறார்கள். ''மானிட வாழ்வென்ன வாழ்வென நொந்து'' பட்டினத்தார் பாடிய வரிகளில் முடிகிறது இந்தப்படம்.

முதல்படம் நமக்கு ''ஜென்டில் மேனை'' நினைவுபடுத்தலாம். அதில் திறமைசாலிகளை புறக்கணித்து ஊழல் செய்யும் அரசியல்-வாதியை பாதிக்கப்பட்ட ஒருவன் கொலை செய்கிறான். நாக்-அவுட்டில் திறமைசாலியை புறக்கணித்த சமூகத்தின் முகத்தில் ''பாதிக்கப்

www.tamilarangam.net

பட்டவன்'' -குத்துகிறான். படம் திரையிட்டு முடிந்தபின் நிகழ்த்தப்பட்ட உரையில் லெனின் 'ஜென்டில் மேனை' தாக்கினார். கவிஞர்கள் அறிவுமதி, பரிணாமன். இருவரது பேச்சும் ஜென்டில்மேன் போன்ற நச்சுப்படங்களுக்கு எதிரான புரட்சிப் படமாக நாக்-அவுட்டை சித்தரித்தன.

சஞ்சீவி ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றவன், எனவே அவனை கௌரவிக்க வேண்டும். தங்கப் பதக்கம் வெல்கிற திறமைசாலிகளால் தான் இந்தநாட்டுக்கு பெருமை. பார்சிலோனா ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லாததால் இந்த நாட்டுக்கு அவமானம். இதற்குக் காரணம் அரசியல்வாதிகளின் தலையீடு. இப்படி இருந்தால் சஞ்சீவி போன்ற திறமைசாலிகள் அனாதைகளாகத்தான் சாவார்கள். அவர்கள் வென்றுவந்த பதக்கங்கள் வெட்டியான் கையில் ''ரெண்டு மூணு பவுன் தேரும்''என்று வெறும் எடையாக, உலோகமாகப் போய் முடியும். இவ்வகையான நீதி நெறிகளை ஆசிரியர் குரலாக படம் முழுக்கக் கேட்கிறோம்.

திறமை பற்றிப் பேசுகிற குரல்கள் வெகு மக்களை திறமையற்ற முட்டாள்களாகவே கருதும். அவர்களுக்கு வாழ்வதற்குத் தகுதியில்லை என்பதே அவற்றின் தீர்ப்பாகவும் இருக்கும். திறமைசாலிகளை தலைவர்களாக, வழிகாட்டுபவர்களாக வைத்துக் கொண்டாட வேண்டியதுதான். மற்றவர்களது வேலை என்று நிர்ணயிக்கும். அதிலும் குறிப்பாக சமூகத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டவர்களை முட்டாள்களாக, அசுத்தமானவர்களாக, ஏமாற்றுக்காரர்களாக, குற்றவாளிகளாக சித்தரித்துக் காட்டும்.

www.tamilarangam.net



நாக்-அவுட்டில் இது நடக்கிறது. சஞ்சீவியின் பிணம் கிடக்க அருகில் மீன் விற்கிறாள் ஒரு கிழவி. பிணத்தின் மீது ஈ மொய்க்கிறது அடுத்த ஷாட்டில் மீன்களின் மேலிருந்து ஈக்கள் பறக்கின்றன. (அசுத்தம்) தனது வியாபாரம் கெட்டுப் போகிறதே என அவள் அங்கலாய்க்கிறாள். ''சும்மா கெட கெழப் பொணமே!'' என்று திட்டு வாங்குகிறாள். அவளைத் திட்டும்போது பார்வையாளர்கள் சிரிக்கின்றனர். முதுமையிலும் வியாபாரம் செய்து பிழைக்க வேண்டிய அவளது நிலை நமக்கு பரிதாபத்தைத் தூண்டவில்லை. தனது வியாபாரமே குறியாய் இருக்கும் அவளது சுயநலம் நமக்கு எரிச்சலைத் தருகிறது. அதனால்தான் அவளை திட்டும்போது நமக்கு சிரிப்பு வருகிறது.

அனாதைப் பிணத்தைக் காட்டி பிச்சை கேட்கிறான் ஒருத்தன். சேர்ந்த பணத்தில் குதிரை வண்டி பிடித்து இடுகாட்டுக்கு கொண்டுவந்து சேர்க்கிறான். பிச்சைக்காசை பிணம் புதைப்பவனுக்குப் பாதியாகப் பகிர்ந்து தருகிறேன். சாராயம் உட்பட ஆளுக்கு பாதி. பிச்சை கேட்டுகொண்டே நடுநடுவே அவன் பணத்தை எண்ணுவது காட்டப்படுகிறது. பணம்தான் அவனுக்கு குறி என்பது போன்ற சித்தரிப்பு. வண்டியில் பிணத்தை ஏற்றிக்கொண்டு வரும் போதும் சோடா குடிப்பதுபோல சாராயம் குடித்துக்கொண்டே வருகிறான். சேர்ந்தகாசை குடித்து அழிக்கிறான் என்று உணர்த்தப் படுகிறது.

சொர்க்கம், நரகம், மறுபிறப்பு இவற்றில் நம்பிக்கை கொண்ட ஒரு கலாச்சாரத்தில் இறந்தவரை அடக்கம் செய்ய வேண்டியதன் புனிதம் நிரம்பிய அர்த்தம் நமக்குத்தெரியும். சாலை ஓரத்தில் சிறிது சிறிதாக உயிரைவிட்டு சவமாகிப்போன சஞ்சீவியை பரப்பரப்போடு

www.tamilarangam.net

இயங்கும் நகரம் கண்டுகொள்ளாமல் புறக்கணிக்கிறது. நகரத்தின் வேகம் நிரம்பிய இயக்கத்தை மறித்து மறித்து அந்த நபர் பிச்சை கேட்கிறான். எல்லா உறவுகளையும் பணஉறவுகளாக மாற்றிவிட்ட நகரம் அவனை "போ போ!" என விரட்டுகிறது. சஞ்சீவி ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்று சேர்த்த பெருமையைவிட அந்தஆள் சேர்த்த பெருமை அதிகமானது. ஆனால், படத்தின் ஆசிரியர் சஞ்சீவியை மட்டுமே மையப்படுத்துகிறார். அந்த நபர் பிணத்தைக் காட்டி காசு சேர்க்கும் குற்றவாளியாக்கப்படுகிறான்.



குதிரை வண்டிகள் இன்று நகரங்களில் புறக்கணிக்கப்பட்ட ஊர்திகள். தனது கடைசிக் காலத்திலும் வண்டி ஓட்டிப்பிழைக்கும்படி நிர்பந்திக்கப்பட்ட கிழவர். ஆள் வராது காத்திருந்த வண்டிக்கு பிணம்தான் சவாரியாகக் கிடைக்கிறது. நாறும் பிணத்தை சாராயம் குடிக்காமல் ஏற்றிச் செல்ல முடியாது. பிணம் ஏற்றிய வண்டி எனத் தெரிந்தால் யாருமே ஏறமாட்டார்கள். வண்டியையே நம்பியிருக்கும் கிழவருக்கு தனது வண்டியில் பிணத்தை ஏற்றிப் போவதென்பது தற்கொலை முயற்சி. ஆனாலும் அதை செய்கிறார். அவர் குடிப்பது மட்டுமே காட்டப்படுவதன் மூலம் பிச்சைப் பணத்திலும், அதைக் கொண்டு வாங்கிய சாராயத்திலும் அவரும் பங்கு போட்டுக்கொள்வதாகவே உணர்த்தப்படுகிறது. ஆக, அவரும் ஒரு குற்றவாளிபோலவே சித்தரிக்கப்படுகிறார்.

பிணம்புதைக்குமிடத்தில் உள்ளவரும் குடித்துத் தள்ளாடுகிறார். தள்ளாடியபடி காய்ந்து இறுகி கிடக்கும் நிலத்தில், வியர்வை பெருக சிரமப்பட்டு குழிவெட்டுகிறார். பிணத்தை புதைக்கும்

www.tamilarangam.net

# போரும் தீர்வும்

போர் முடிந்த பின்பு சொன்னார்கள் :
“போர்கள் எதையுமே தீர்ப்பதில்லை
எல்லாவற்றையும் பேசியே தீர்க்கலாம்”.

ஒரு கணம்
சரி போலவும் இருந்தது
மறு கணம்
பிழை போலவும் இருந்தது .

குண்டு விழுந்த மருத்துவ மனையையும்
எரிந்து போன நூலகத்தையும்
தரை மட்டமான கிராமங்களையும்
உழவு மறந்த வயல்களையும்
காணாமற் போன மனிதர்களையும்
கேட்டேன்.

பதில் இல்லை.

ஒரு பையனைச் சுமந்து சென்ற
துப்பாக்கி பதில் சொன்னது :
“பேசி எதுவுமே தீராததால்
எல்லாவற்றையும் போர்களே தீர்க்கின்றன”.

அது
சரி போலவும் பிழை போலவும் இருந்தது .

– சிவசேகரம் .

www.tamilarangam.net

# ஆண் பாவம்.

முரளி...

1991ம் ஆண்டு.
யூலாய் மாதம்.
புதன் கிழமை.
மாலை 6.30 மணி.

வழமையை விட தொடர்ந்து வீட்டுக்குப் போகாமல் சொனி வீட்டுக்குப் போக வேண்டும் என்பதால் இடையிலேயே இறங்கி விட்டேன்.

காலை றெயினில் போகும் போது எவ்வளவோ நெருக்கடிகள் இருந்தும் என்னருகில் இடமிருந்தாலும் வந்தமர வெட்க்கப்படும் அல்லது கூச்சப்படும் டெனிஸ்க்காரர் மத்தியில் புன்னகையோடும், குதூகலத்துடனும் என்னருகில் வந்து அமர்ந்து கொள்பவன் தான் சொனி.

ஏறக்குறைய ஒரு வருட றெயில்ச் சினேகம் எங்களுக்குள் "ஏன் இங்கு அகதியானேன்,என் நாட்டில் என்ன பிரச்சினை, எம் சாப்பாடு....தூள் உறைப்பு...என் பவைகள் பற்றியும் நன்கு அறிந்து கொண்ட சினேகிதன். இன்று அவன் வீட்டுக்குத் தான் போகின்றேன்.

ஒரு மாதிரி அவனது முகவரியைக் கண்டு பிடித்து வீடு போய்ச் சேர்ந்தேன்.

சக்ஸ்ஸபோன் வாசிக்கும் ஒரு அமெரிக்க ஜாஷ் இசை வித்துவானின் பெரிய படமொன்று அந்த அறையினுள் பெரிதாய் தொங்கிக் கொண்டிருப்பது என் கண்களில் பட்டது. ஆங்காங்கே சில ஆண்களின் அரைகுறை நிர்வாணப் படங்களும் வேறு சில மொடோன் கலர்ப் படங்களும் தொங்கிக் கொண்டிருந்தன. இருந்த இடத்திலிருந்து எல்லாவற்றையும் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தேன். சொனி அழகாகத் தான் தன் வீட்டை அலங்கரித்திருந்தான்.

வயின் போத்தல் ஒன்றோடு பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டான் சொனி. திடீரென எழுந்து போய் சில படங்களை எடுத்து வந்து என்னிடம் நீட்டினான்."இது தான் என் நண்பன் பீற்றர். நானும் இவனும் தான் இப்போது ஒன்றாய் இருக்கின்றோம்.நாங்கள் அடுத்த கோடை காலத்தில் திருமணம் செய்து கொள்ளலாம் எனத் தீர்மானித்துள்ளோம். பீற்றர் மிகவும் நல்லவன்....இனிமையானவன்...."என்றான் சிரித்தபடி..

"சொனி....நீ என்ன சொல்லுகின்றாய்...? உனக்கும் பீற்றருக்கும் திருமணமா....? என்ன..விசித்திரமாயிருக்கிறது என்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன நான் உனக்குச் சொல்ல வில்லையா...? நானும் பீற்றரும் ஏறக்குறைய நான்கு வருடமாக சினேகமாயிருக்கின்றோம்.நீண்ட கால யோசனையின் பின் திருமணம் செய்யலாம் எனத் தீர்மானித்துள்ளோம்." என்றான் மிகவும் சாதாரணமாக.

ஒன்றுமே பேசாது வயினை யெடுத்து ஒரு தரம் உறிஞ்சியபடி ஒன்றுமே பேசாது மௌனமாயிருந்தேன்.

"என்ன ஒன்றுமே பேசாமல் இருந்தால் என்னமாதிரி...ஏதாவது சொல் என்று"என்று என் மௌனத்தைக் கலைத்தான்.

"இல்லை சொனி நீயேன் ஒரு பெண் சினேகியைத் தேடிக் கொள்ளக் கூடாது...எனபது எனக்கு விளங்கவில்லை. இந்த நாட்டிலுமா பெண்களுக்குப் பஞ்சம்...?

ஒரு அசட்டுச் சிரிப்பை உதிர்த்தபடி "என்ன பெண்களையா...? எனக்கு அப்படியொரு ஆசை விருப்பம் இதுவரை தோன்றவில்லை. எனக்கு ஆண் சினேகத்தில் தான் அதிக நாட்டம்" என்றான் மிகவும் சாதாரணமாக.

"சொனி எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. ஒரு ஆண் ஒரு பெண்ணைத் திருமணம் செய்வது தான் இயற்கை நடைமுறையும் கூட. ஆனால் நீயேன் ஒரு பொடியனைப் போய் திருமணம் செய்ய நினைக்கின்றாய்....?

"அப்படியெனறால் எங்கள் சினேகம் பிழையென்று சொல்லுகின்றாயா....".? எனக் கோபப்பட்டே கேட்டான்.

கோபத்தினால் அவனது முகம் இரத்தம் போல் சிவந்து கொண்டது.

"சொனி நீ என்னைக் கோபிக்க வேண்டாம் இந்த முறை பிழையானது இந்த முறையினாலேயே உலகம் இன்று திணறிக் கொண்டிருக்கின்றது. நீயும் அப்படியொரு வருத்தத்தினுள் மாட்டிவிட.....வேண்டாம் சொனி..."

"நீயும் சாதாரண மதவாதிகள் போலவே கதைக்கின்றாய்..ஏன் எங்களைப் போன்றவர்களின் உணர்வுகளையும் ஆசைகளையும் மதிக்க மறுக்கின்றீர்கள். ஒரு பெண் மூலம் பெறுகின்ற சுகத்தைப் போலவே ஒரு ஆண் இன்னொரு ஆணிடத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளுகின்றான்.அப்படியான ஒரு சுகத்தைத்தான் நானும் இதுவரை பெற்றுக் கொண்டிருக்கின்றேன்." சொனியால் கதைக்க முடியாமல் கூனிக் குறுகினான்.

சொனியைப் பார்க்க கவலையாகவும் பரிதாபமாகவும் இருந்தது. சோர்வினால் வாடி வருத்தமடைந்தான்.

சொனி நீ ஒன்றும் சொல்லி உன்னை நியாயப் படுத்தாதே. இது பிழை இது இயற்கைக்கு விரோதமானது. உங்களையிந்த டெனிஸ் அரசாங்கம் ஏற்றுக்

www.tamilarangam.net



கொண்டிருக்கலாம். முளுமை யாக இந்தச் சமூகமோ அல் லது வேறு சமூகமோ உங்க ளை ஏற்றுக் கொள்ள மாட்டாது நோர்வே.சுவீடன் அல்லது வேறு நாடுகளோ அரசாங்க ரீதியாக அங்கீகரிக்கவில்லைத் தானே. இந்த டென்மார்க்கில் எதற்குச் சுதந்திரம் எதற்கு கட்டுப்பாடு என்பதே இல்லாமல் போய் விட் டது. இந்த நிலை நீடிக்குமா னால்....உங்களைப் போன்றவர் களின் வாழ்க்கை மட்டுமல்ல இந்த நாட்டின் வாழ்க்கையே குட்டிச் சுவராய்ப் போய் விடும்.

நீ இப்படிக் கதையாதே. ஏன்..? கட்டுப்பாடான கலாச்சாரமும்; ஒழுங்கான வாழ்க்கை முறை யும் கொண்ட உன் தேசத்தில் ஆணினச் சேர்க்கை இல்லையா தமிழர்களில் ஒருவரும் அப்ப டியில்லையா...?" என்றான் சிரித் துக் கொண்டே

அவனது சிரிப்பில் கேலியும் நளினமும் வழிந்தோடியது.

"சொனி எங்களுடைய நாட்டி லும் இவை இருக்கின்றது தான் இல்லை என்று சொல்ல வரவி ல்லை, ஆனால் அவை சமூகத் தால் அங்கீகரிக்கப்படாத, ஓர் அற்ப விடயமாகவே அங்கே இருக்கின்றது. இந்த விடயம் பற்றி அங்கே ஒருவரும் பெரிதா கக் கதைப்பதுமில்லை. ஆனா ல் இங்கே.... பத்திரிகையில், ரீவியில், வானொலியில்...இது சம்பந்தமாக பேட்டிகள், கருத்து க்கள்... இதற்காக சங்கங்கள் அமைப்புக்கள்...இவனும் அவ னும் திருமணம், அவளும் இவளும் விவாகரத்து....தாயும் மகளும்...தகப்பனும் மகனும் திருமணம் ஒன்றாயிருக்கினம் என்று எத்தனை எத்தனை செய்திகள்...

இதற்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக்கின்றாய் ? உங் களுக்குள்ள பாலியல் வக்கிரம். இந்த வக்கிரம் தான் இன்று உங்களை இந்த நிலைக்கு ஆளாக்கியிருக்கின்றது. இந்த நிலை முத்திப் போய்த் தான் இன்று குழந்தைகளையும் பாலி யலுக்குப் பயன்படுத்துகின்றீ ர்கள்; யாரை..? பசியாலும் பட்டி னியாலும் வாடும் எங்கள் குழந் தைகளை. சுற்றுலாப் பயணி கள் என்று சென்று கொஞ்சக் காசு கொடுத்து எம் குழந்தை களை இங்கே கொண்டு வந்து நிறுவன ரீதியாக வியாபாரமும் செய்கின்றீர்கள். இதற்கான பிரதிபலன்களை நீங்கள் அனுப வித்தே தீருவீர்கள். இன்று இந்த ஐரோப்பியச் சமூகத்தில் மலிந்து போய்க் கொண்டிரு க்கும் குழந்தைகள் பாலியல் வன்முறைகளுக்குத் துணை

போகும் ஒவ்வொருவரும் மிருக ங்களுக்குச் சமமானவர்கள் என் பதை மனதில் வைத்துக் கொள் ளுங்கள். யாராய் இருந்தாலெ ன்ன எந்த நாட்டவராய் இருந்தா லென்ன. சொனி இதையிட்டு நான் மிகவும் வேதனையாக இருக்கின்றேன்,"

"ஏய்...நான் அப்படியொன்றும் கூடாதவன் அல்ல நீ கோபப்படு வதிலோ அல்லது கவலைப்படு வதிலோ நியாயம் உண்டு. நீ நினைப்பது போல் பாலியல் வக் கிரம் கொண்டவன் அல்ல நான் சாதாரண உணர்வுகளுள்ள மனி தன் தான் நானும்" என்றான்

நான் ஒன்றுமே பேசாது மௌன மாயிருந்தேன்.

வயினை எடுத்து என் கிளாசில் நிறைத்து தூக்கித் தந்தான்"குடி கோபப்படாதே..." நீ சொன்ன வைகள் பற்றி நான் இப்போது யோசிக்கின்றேன். இது பற்றி ஒருவரும் என்னுடன் இதுவரை கதைத்ததில்லை, கேட்டதும் இல்லை, என்னுடைய எதிர்கால வாழ்வு பற்றி நான் நிறையவே சிந்திக்க வேண்டியுள்ளது. இது பற்றி பிறருடனும் கதைக்க வேண்டும் என யோசிக்கின்றேன் என்றான்.

எனது கிளாசில் மீண்டும் வயி னை நிரப்பி விட்டு என்னைப் பார்த்துத் தலையசைத்த படி தன் கிளாசையும் எடுத்து என் கிளாசோடு முட்டியபடி " இன்று ஒரு நல்ல விடயம் பற்றிக் கதைத்திருக்கின்றோம் என நினைக்கின்றேன் நாங்கள் மீண் டும் மீண்டும் கதைப்போம் என்னை நீ வெறுக்க வேண் டாம்" என்றான்

"நீ இப்படிச் சொல்வது எனக்கு சந்தோசமாக இருக்கின்றது. இந்த நாட்டில் நல்ல மாதிரி யாக வாழ வேண்டும் என நினைப்பவர்கள் அப்படி வாழ்வ தற்கு வாய்ப்புக்கள் நிறையவே உண்டு. அதே போல் ஒரு கேடு கெட்ட வாழ்க்கை வாழ வேண்டும் என நினைப்பவர்க ளுக்கு கெட்டுப் போக வழி வகைகளும் நிறையவே இருக் கின்றது. எந்த வழிக்கும் இந்த அரசாங்கம் துணை போகும் என்பதை நாம் நன்றாக விளங் கிக் கொள்ள வேண்டும்." எனக் கூறிய படி வயினை எடு த்துக் குடித்தேன்.

முற்றும்.

அடுத்த இதழில் டெனிஸ் நடைபாதையின் மரநிழலின் கீழ் அமர்ந்திருக்கும் ஒரு வயோதிப தமிழ் அம்மா.

www.tamilarangam.net

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)



# ஒப்பீடு

துல்லியமாக நள்ளிரவு பன்னிரண்டுமணி
குர்திஸ்தானும் துயராறும்போல
கோர்த்துக் கொண்டு இரு கைகள்

துல்லியமாக 12 மணி
எனது கற்பனை போல
சுத்தமான வெளிர்ந்த சாப்பாட்டு மேசை
இருபது சிகரட்டுகள்
ஒரே ஒரு திறப்பு வார்த்தை

1 மணிக்குப் பின்னால்
என்னையும் என் நாட்டு விழியும் போல
இரண்டு வேறுவேறான கடிகாரக் கைகள்

2 மணிக்குப் பின்னால்
நாடு கடந்து வாழ்பவர்களும்
அகதி விண்ணப்பதாரர்களும் போல
பேனா காகிதம் மேசையிலிருக்கும் எல்லாம்
குழம்பியபடி சிதறியபடி

3 மணிக்குப் பின்னால்
ஆஸ்ட்ரே நிறைய சிகரட்டுத் துண்டுகள்
புகையிலைச் சாம்பல்
அறை நிறைந்த புகை

தூங்கும் கவி
விழித்த கவிதை.

www.tamilarangam.net

## விதைகள்..

நாங்கள்பத்துலட்சக்கணக்கானவர்கள்
நாங்கள் மூத்த மரங்கள்
புதிய வளரும் செடிகள்
விதைகள்

அங்காரா தலைக்கவசத்திலிருந்து விறடிகாலையில்
அவர்கள் வந்தார்கள்
எங்களை வேரோடு பிடுங்கினார்கள்
எம்மை தொலை தூரம்
வெகு தொலைவுக்கு எடுத்துச் சென்றார்கள்.

(மிகுதி அடுத்த இதழில்)

# கவி என்றால் என்ன......?

"கவி" என்ற பதத்தின் முதல்பொருள் 'ஸர்வமும் அறிந்தவர் என்பது தான்' ! அதன் பின்பே தான் அறிந்ததைச்சொற்களால் அழகாக வெளியிடும் இலக்கிய கர்த்தன் என்ற பொருள் ஏற்படுகின்றது .தூயவாழ்வு நடத்தி தெய்வ சிந்தனையில் ஊறியிருந்தாலே,அறிவானது தெளிவு கண்டு எதையும் அதற்கான ஆற்றலைப்பெற முடியும்.வால்மீகி போன்ற பண்புடைய மகாகவிகள் அப்படியிருந்தவர்களே.

இன்றோ எப்படிப்பட்ட வாழ்க்கை வேண்டுமானாலும்நடத்தி விட்டு கவிகள் எனப் பெயரெடுத்து வருகின்றார்கள்.வெளியிலே என்ன சொல்லுகின்றார்களோ அதனாலேயே கீர்த்தி ஏற்படுகின்றது. உள்ளே எப்படியிருக்கின்றார்கள் என்பதைப் பார்த்தால் வேறுவிதமாகவும் இருக்கின்றது.இவர்கள் உண்மையில் 'கவி' என்னும் புனிதப்பெயருக்கே தகுதியற்றபர்கள். இவர்களைச் செய்யுள் செய்வோர் என்றே சொல்ல வேண்டும் .

மேற்கூறப்பட்ட இந்தக் கருத்து ஆய்வுக்குட்பட வேண்டியதும்.தரமான விமர்சனத்துடக்குட்படுத்தப்பட வேண்டியதுமாகும்.சமீபத்தில் தமிழ் நாவல் ஒன்றில் படிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது .அவ்வாறாயின் கண்ணதாசன் மது போதையில் ஏராளமான கவிதைகளையும் திரைப்படப்பாடல்களையும் எழுதியிருப்பதால் அவரை 'கவி' என்று அழைக்க முடியாமல் போய்விடுமா....?

சஞ்சீவி வாசகர்களிடமிருந்து இது தொடர்பான விமர்சனங்களை அறிந்து கொள்ள அவாவுகின்றேன்.

அன்புடன்
செல்வா – சின்னத்தம்பி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*இன்று கொழும்பிலும், ஏனைய பகுதிகளிலும் சிங்கள மக்கள் மத்தியில் வாழும் தமிழ் மக்களுக்கு சரியான பாதுகாப்பில்லை. கொலன்னாவை சம்பவத்தோடு இனவாதம் மேலும் அதிகரித்துள்ளது. தமிழ்ப் பகுதிகளிலும் சரி, சிங்களப் பகுதி களிலும் சரி அப்பாவித் தமிழ் மக்களுக்கு ஏற்படும் அநீதிகளை எந்தத் தமிழ்ப் பத்திரிகைகளும் வெளியிடுவதில்லை. இந்த சிங்கள இனவெறி அரசினைப் பகைத்துக் கொள்ள யாரும் விரும்பவில்லை. பத்திரிகைகள் மட்டுமில்லை, தமிழ் மக்களின் பிச்சையில் பாராளுமன்றம் சென்ற அரசியல்வாதிகள், சிங்கள இனவெறி அரசினை அண்டிப் பிழைப்பு நடாத்தும் சில தமிழ் குழுகள் யாருமே இதற்காக குரல் கொடுத்ததில்லை. ஆனால் சந்திரிகா அரசோ, இன்று சிங்கள மக்களிடம் இனவாதம் இல்லை, இன வாதத்தை புதிய அரசாங்கம் களையெடுத்துவிட்டது என்று சொல்லிக் கொண்டு மறைவில் இனத் துவேசத்தினை தூண்டி பல அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதுடன் திட்டமிட்ட இன அழிப்பினை நடாத்தி வருகின்றது. இதனை எழுதி வரும் ஒரு சில பத்திரிகைகளையும் தணிக்கை என்ற பெயரில் செய்திகளை இருட்டடிப்புச் செய்து வருகின்றது. சரிநிகர் பத்திரிகையில் வெளி வந்த ஒரு சில சம்பவங்களை இங்கு தருகின்றோம்.*

# கொலன்னாவ புகை மண்டலத்துள் மூழ்கிய உண்மைகள் !

**வனாத்தமுல்லை இரு படுகொலைகள்:**

வனாத்தமுல்லை பகுதியில் இரு இளைஞர்கள் மிகக் கோரமாக சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அவர்களது கதை இது. இவர்களுக்கு வட கிழக்கு என்ன நிறமென்பது கூட தெரியாத தோட்டப்புற இளைஞர்கள். ஊர் நாவலப்பிட்டி. கொழும்பில் ஐந்து வருடங்களாக தொழில் புரிந்தார்கள். கொலன் னாவை எண்ணெய் குதம் ஒக்டோபர் 20ம் திகதி தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த பிரதேசத்தைச் சுற்றியுள்ள பலர் தீ பரவும் அச்சத்தின் காரணமாக இடம் பெயர்ந்தனர். சிலர் மாத்திரம் அங்கேயே இருந்தனர். எணணெய் குதம் வெடித்த இடத்திற்கருகிலுள்ள வனாத்தமுல்லைப் பகுதியில் 'டம்ப்' என்றழைக்கப்படும் 43ம் இலக்க தோட்டத்திலேயே இச்சம்பவம் நடந்தது.

எண்ணெய் குதம் வெடித்த தினமான 20ம் திகதி காலை சிங்கள காடையர் கூட்டங்கள் சில, பல்வேறு திசைகளிலும் வேட்டையைத் தொடங்கியது. அதி லொன்று டம்ப் தோட்டத்திற்குள்ளும் நுழைந்தது.

"கோ கொட்டி ", "கோ தெமளு? " ("எங்கே புலி? " " எங்கே தமிழர்? ") எல்லாத் தமிழர் வீடுகளும் நுழைந்தனர். ஏறத்தாழ 500 பேருக்கும் மேற்பட்ட கூட்டமொன்று கம்பு, கோடரி, அலவாங்கு சகிதம் வீடுகள் சிலவற்றைத் தாக்கியது. சில வீடுகளுக்குள் நுழைந்து (சிங்களத்தில்) அடைய அட்டையை எடு, ' நீ கொட்டி தானே ' ' எங்கே ஆயுதங்கள் ' எனக் கேட்டு அடித்தனர். நேரம் 10மணி இருக்கும். வனாத்துமுல்லையில் வனாத்துமுல்லையில் ஒரு வீட்

www.tamilarangam.net

டில் (பொரல்லை E.A.P.எதிரிசிங்கவின் ரெஸ்ரோரன்டில் வேலை செய்து வந்த) சகோதரர்கள் இருவரான சதாசிவம் ஸ்ரீகாந்த் (வயது 19), சதாசிவம் ஜெயகாந்தன் (வயது 23) ஆகிய இருவரும் தீபாவளிக்காக மறுநாள் ஊருக்குப் போகப் போகும் உற்சாகத்தில் இருந்தார்கள்.

ஒரு கூட்டம் கத்தி, கம்புகளோடு வந்து கொண்டிருப்பதாக தோட்டத் திற்குள் கதைத்துக் கொள்ளவே " அண்ணா என்னிடம் ஐடென்ரிற்றி கார்ட் இல்லை நான் போய் ஒளித்துக் கொள்கிறேன் " எனக்கூறிச் சென்று கட்டிலுக் கடியில் ஒளிந்து கொண்டான். இதற்கிடையில் கூட்டம் வந்தது. வீட்டிற்குள் புகுந்த கூட்டம் ஜெயகாந்திடம் அடையாள அட்டையை கேட்டது. தன்னிடம் இருந்த தொழில் புரியும் நிறுவனம் வழங்கிய அடையாள அட்டை, கடிதங்கள் என்பவற்றை எடுத்துக் காட்டினான். அதைப் பறித்த ஒருவன் அவற்றைக் கிழித்து தூர எறிந்தான். " நீ புலிதானே " எனக் கேட்டு ஒருவன் அறைந்தான். தொடர்ந்து எல்லோரும் பொல்லுகளால் அடித்தனர். வீட்டில் மற்றவர்கள் எங்கே எனக் கேட்டு தேடிய போது கட்டிலுக்கடியில் ஒழித்திருந்த ஸ்ரீகாந்தைப் பார்த்து ' இதோ புலி ' எனக்கூறி வெளியில் இழுத்தான் ஒருவன். இன்னொருவன் அலவாங்கினால் ஓங்கி அடித்தான் தலையில். ' அம்மா என சத்தமிட்டுக் கொண்டு விழுந்த ஸ்ரீகாந்தையும் ஜெயகாந்தையும் கைகள் இரண்டையும் சேர்த்து பின்னால் கட்டி இழுத்துக் கொண்டு போனார்கள். வழியில் கல்லும், மண்ணும் உடம்பைக் கிழிக்க, புலி... புலி... , கொல்... கொல்... எனச் சத்தமிட்டுக் கொண்டு அடித்த அடிகள் மரண ஓலமாய் ஒலித்தன. இவர்களது பாட்டனார் முனிசாமியை அடித்து ஓரமாக்கியிருந்தனர்.


ஸ்ரீகாந்த்

நேரம் 10.30. இருவரையும் வீதிக்கு இழுத்துக் கொண்டு வந்திருந்த போது சூழ ஆயிரக் கணக்கானோர் குழுமி நின்றனர். ஊரடங்கு போட்டிருந்த அந்த நேரத்திலும் கூட்டத்திற்கு குறைவில்லை. தடுத்து நிறுத்த ஒருவரும் இல்லை. ஸ்தலத்தில் பொலிசார் கூட இருந்தனர். கூட்டம் தனது பணியைத் தொடர்ந்தது. கத்தி, வாள், அலவாங்கினால் தாக்கினர். ஓலம் கேட்க அவர்களை கொன்றே போட்டனர்.


ஜெயகாந்த்

ஏற்கெனவே நிர்வாணமாக்கப்பட்டிருந்த அந்த உடல்களில் ஆணுறுப்பு வெட்டப்பட்டிருந்தது. பிணங்களின் கண்கள் தோண்டப்பட்டிருந்தது. பல இடங்களில் வெட்டுக்காயங்கள். தீப்பந்தம் கொண்டு முகம் தலை உட்பட பல இடங்களில் சுட்டனர். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த தெமட்ட கொட பொலிஸார் எல்லாம் முடிந்த பின் விட்டு விடுங்கோடா என்றனர்.

புலியைக் கொன்று விட்ட வீரர்களாக அந்த கூட்டம்

www.tamilarangam.net



அப்பு முனிசாமி

ஆரவாரித்தது. தாகம் தணியவில்லை. இறுதியாக கொல்லப்பட்ட இளைஞர்களின் பாட்டாவை இழுத்தனர். கத்தியை ஓங்கிய வேளை அந்த நேரம் பொலிஸ் வாகனத்தில் பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் வந்திறங்கிய பொலிஸார் அவரைக் காப்பாற்றினார்களாம். பொலிஸார் முதியவரை காப்பாற்றிவிட்ட திருப்தியில் திரும்பிச் சென்றனர்.

கண்முன்னே கொலைஞர்கள் கிடைத்தும் கூட அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முற்பகல் 10.30 தொடக்கம் 2.30மணி வரை இரு இளைஞர்களும் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். ஊரடங்குச் சட்டம் போடப்பட்ட நிலையில் இச்சம்பவம் பொலிஸாருக்கு தெரியாமலிருக்க நியாயமில்லை. பொலிஸார் தெரிந்தும் இப்படி நடந்திருக்கிறார்கள். கொல்லப்பட்டவர்களின் பாட்டனார் அப்பு முனிசாமி இது பற்றி கூறும் போது "பொலிஸாரால் கூட அதை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அந்த வெறிபிடித்த கூட்டம் நடந்து கொண்டது" உண்மையும் அது தான். ஆனால் இச் சம்பவங்களுக்கு காரணமும் பொலிஸார் தான் என்கிறார் கொல்லப்பட்டவரின் சித்தியான ரங்கன் ருக்மணி . அவர் மேலும் தெரிவிக்கும் போது " ஏதோ ஒரு சிவில் பாதுகாப்பு என இங்கு எவரெவரையோ நியமித்திருக்கிறார்கள், அவர்கள் தான் பொலிஸார், தங்களை புலிகளை தேடும்படி கூறியிருக்கிறார்கள் என்ற சாட்டில் இப்படி செய்கின்றனர். எங்கள் பிள்ளைகளை கொன்றுவிட்டு, அதற்குப் பின் எங்கள் வீட்டையும் நாசமாக்கியிருக்கின்றனர். பெறுமதியான சாமானகள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது. வீடு இப்போது தரை மட்டமாக இருக்கிறது " என்றார்.

## பாலத்துறை படு கொலை:

பாலத்துறையிலும் திருமலை கர்ணன் (வயது 22) எனும் இளைஞர் கோரமாகக் கொல்லப்பட்டார். இவரும் தோட்டப்புற இளைஞரே. ஊர் அக்கரைப்பத்தனை சீனி தோட்டம். கடந்த 5வருட காலமாக கொழும்பு புளுமண்டல் வீதியில் பழனியாண்டி ராமையா என்பவரின் சில்லறைக் கடையில் வேலை செய்து வந்தவர்.



20ம் திகதி குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு அடுத்த நாளான 21ம் திகதி காலை 9 மணியளவில் கடைக்கு சாமான்கள் வாங்குவதற்காக பாலத்துறை சந்தைக்கு சென்றுள்ளார் கர்ணன். சைக்கிளை ஓரமாக வைத்துவிட்டு பொருட்கள் வாங்கிக் கொண்டிருக்கையில், " புலி.... புலி.... அவனைப் பிடி....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவனைக் கொல்..."எனச் சத்தமிட்டுக் கொண்டு ஒரு கூட்டம் ஓடி வந்துள்ளது. தன்னைப் பார்த்து ஓடி வருபவர்களைப் பார்த்து விட்டு கர்ணனும் ஓடியிருக் கிறார். கூட்டம் இப்போது அதிகரித்திருந்தது. கூட்டம் கத்திகள், கம்பிகள் சகிதம் விரட்டி வர கர்ணனோ இந்தச் சூழ்நிலையில் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள சிறிது கூட சந்தர்ப்பம் இருந்திருக்காது போலும், பாலந்துறை சந்தியை யும் தாண்டி மாதம்பிட்டி வீதியை நோக்கி ஓடினார். தனக்கு முன்னாள் ஏனையோர் தன்னைப் பிடிக்க ஆயத்தமாக இருப்பதைக் கண்டு சந்தியிலிருந்த ' ஸ்ரீ சங்க போதி மகா வித்தியாலம் ' பாடசாலை மதிலுக்கு மேல் தாவ முயற்சிக்கும் முன்ன மேயே அந்தக் கும்பலிடம் அகப்பட்டுக் கொண்டார். கொடூரமாக தாக்கினர். இந்த இளைஞனின் ஆணுறுப்பும் வெட்டப்பட்டிருக்கின்றது. அத்தனை பேரும் சேர்ந்து தாக்கியதில் இறந்து போன அவ்விளைஞனின் உடல் மிக கோரமாக சிதைக்கப் பட்டிருக்கிறது. தலை பிளந்து மூளை வெளியே தள்ளிக் கொண்டிருந்தது. ஆணுறுப்பைக் கூட வெட்டியிருந்தனர்பல இடங்களில் வெட்டுக் காயங்களினால் கிழிக்கப்பட்டிருந்தது. பிரேத கூடத்தில் அவனது உடலை பரிசோதித்த வைத்தியர் 17 கத்திக் குத்துக் காயங்கள் இருப்பதாக பதிவு செய்தார். உயிர் போன பின் னரேயே அத்தனை குத்துகளும் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார். பிண மான பின்னும் இவ்வளவு கோரத்தனம் செய்திருக்கிறார்கள் என்றால் எவ்வளவு வெறித்தனம் இருந்திருக்கும் என்கிறார் கடை சொந்தகாரான பழனியாண்டி ராமையா. மேலும் அவர் தெரிவிக்கும் போது, " இதோ பாருங்கள் அந்த கவுன் தீபாளிக்காக ஊரிலுள்ள தங்கைக்கு கர்ணன் வாங்கிய உடை. அவனாலேயே அந்த ஏழை தங்கை சிறிதாவது படிக்க முடிந்தது...." அழத் தொடங்குகிறார்.

## மட்டக்குளி - ஸ்ரீ விக்கிரமபுர

மட்டக்குளி –ஸ்ரீவிக்கிரம புர எனும் இடத்தில் வாழ்ந்து வந்த தமிழர்களின் வீடு களுக்குள் புகுந்த சிங்கள காடையர் கூட்டமொன்று பலரை அடித்து சித்திரவதை செய்து வீடுகளை உடைத்தது, கொள்ளையடித்துச் சென்றிருக்கிறது. இச் சம்ப வத்திலும் பொலிஸாரின் பங்களிப்பு அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு ஏறத்தாழ 125 வீடுகள் கொள்ளையடிப்பு, வீடுடைப்புக்குள்ளாயிருக்கின்றன. இச் சம்பவத்தில் அதிக காயங்களுக்குள்னானவா் ஒருவரான எம்.செல்வகுமார் இது பற்றி கூறும் போது "21ம் திகதி காலை 8.30மணியிருக்கும் நான் கடைக் குச் செல்ல வெளியே வந்த போது சமித்தி புர பக்கத்திலிருந்து ஒரு கோஷ்டி வந்தது. அவர்கள் 500 பேருக்கும் மேல் இருப்பார்கள். அவர்கள் கையில் பொல்லுகள், கத்தி கோடாரி போன்றவை காணப்பட்டன. ஓடிவந்து கதவை பூட்டிக் கொண்டேன். ஆனால் வந்த கும்பல் கதவைத் திறக்கும் படி கத்தவே திறந்தேன். அடையாள அட்டையை காட்டச் சொல்லி அடித்தனர்."நீ புலி தானே" எனக் கேட்டு அடித்தனர். இடையில் கதறிக் கொண்டு தடுக்க முயற்சி செய்த எனது. மனைவி ராஜேஸ்வரி (வயது 26)யையும் பெண்கள் தாக்கினர். அடிபட்டு விழுந்த என்னை அலவாங்கினால் குத்தினர். தலையில் அடித்தனர் இரத்தம் அதிகமாக ஒழுகியது. கீழே விழுந்த என்னை இழுத்துச் சென்றனர்.போகும் வழி யில் "கொட்டியாவை பிடித்து விட்டோம்" எனக் கத்திக் கொண்டே போனார்கள். நேரே பொலிஸூக்கு கொண்டு சென்று கொடுத்தார்கள்.பொலிஸார்

( தொடர்ச்சி பக்கம் 48 )

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி

இலக்கம்: 28

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 4 | 5 | ■ | 7 | 8 |
| 9 | ■ | 11 | 12 | 13 | 14 | ■ | 16 |
| 17 | 18 | 19 | ■ | ■ | 22 | 23 | 24 |
| 25 | 26 ம் | 27 | 28 | ■ | 30 | 31 | ■ |
| ■ | 34 | 35 | 36 | ■ | ■ | ■ | 40 |
| 41 | ■ | 43 | 44 | 45 | 46 த் | 47 | 48 |
| 49 | 50 | ■ | 52 | 53 | 54 | 55 னை | ■ |
| 57 | 58 | 59 | 60 | ■ | 62 | 63 | 64 |

## இட – வலம்.

1. 2: இது ஒருவர் மற்றவருடன் தொடர்பு கொள்ள உதவும் ஊடகங்களில் முக்கியமானதாகும்.

4. 5: இது ஓர் தானிய வகையாகும்.

8. 7: நாக்கு மொழியினைப் பேசுவதற்கு உதவுவதுடன், இதனை அறியவும் உதவுகின்றது.

11.14: 'தாழம்பூ 'போன்றவாசனை மலர்களில் வாழும் விசம் உள்ள சிறிய உயிரினங்களில் இதுவும் ஒன்றாகும்.

17.19: ஒருவர் வருத்த மிகுதியால் மெலிந்து போனாலும் முற்றத்தில் அழகு வரி போடுதலையும் இப்படிச் சொல்வர்.

22.24: மட்பாண்டங்களில் ஒன்றான இது புராதமானது.

28.25: இதனையும் மாமா எனக்காட்ட நாம் பாற் சோறு உண்டோம். இதிலும் நாம் காலடி வைக்கலாம். குழம்பியுள்ளது.

30.31: பூமியை இப்படியும் அழைப்பர்.

34.36: கருமேகமூட்டத்தினையும் குற்றச் சுமத்தலையும் இப்படிக் கூறுவர்.

43.48: இது வியாபாரம் என்பதன் ஒத்த சொல். ஆனால் குழம்பியுள்ளது.

50.49: இது வற்றாது பாய்ந்தால் கடலைச் சேரும்.

52.55: குற்றவாளி எனத் தீர்மானிக்கப் படுபவர் மீது இது சுமத்தப் படுவதாகும்.

57.60: பனம் நார் அல்லது ஓலையால் முடையப்பட்ட பெரிய பெட்டியினை இப்படி அழைப்பர்.

64.62: மலையின் தளப்பகுதி இப்படியும் அழைக்கப்படும்.

## மேல் – கீழ்:

1.25: கிறீன் லாண்ட் மக்கள் இந்த இனத்தைச் சேர்ந்தோராவர்.

8.24: கெட்டிக் காரப் பிள்ளையை இப்படி செல்லமாகக் கூறுவர்.

11.43: கோவலன் கண்ணகி சரித்திரத்தில் இந்த ஊரும் முக்கியமானது.

12. 4: இது உதவி அற்ற நிலையைக் குறிக்கும்.

13. 5: குதிரை ஒலி எழுப்புவதை இப்படிக் கூறுவர்.

28.60: இது 'கருத்து 'என்பதற்கு ஒப்பானது.

30.14: இது அன்புக்கு ஒப்பானது.

www.tamilarangam.net

34.18:எங்கள் 'இடம் ' பெயர்வினை இப்படி அழைப்பர். இது குழம்பியுள்ளது.
45.53:இது ஐம்புலன்களில் ஒன்று.
46.62:வாழை மடலினை இப்படியும் கூறுவர்.
48.40:இது உடல் 'சக்தி ' எனப்படும்.
57.41:சூரிய ஒளியும்.நெல் மணிக்கொத்தும் இப்படி அழைக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டியாளர்களுக்கு:

இதழ் இல:31இன் கு.எ.போட்டியில் தகவற் பிழைகளுடன், விடைத்தாள் முழுமையற்று இருப்பதன் காரணத்தாலும் இதனை போட்டிக்கு சேர்த்துக் கொள்ளமுடியவில்லை. இதன் தவறுக்கு வருந்துகிறோம்.

மேலும் சஞ்சீவியின் தவிர்க்க முடியாத காரணமாகவும், கு.எ.போட்டியினை இதழ் இல:33 இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்துள்ளோம். போட்டியில் பங்குபற்றியவர்களில் சில போட்டியாளர்களின் பாசில்கள் முகவரிமாற்றம் காரணமாக எமக்குத் திரும்ப கிடைத்துள்ளது. போட்டியில் தெரிவு செய்யப்பட்டிருந்தும் இதுவரை பரிசில்கள் கிடைக்கப் பெறாதோர் சரியான முகவரியினை எமக்கு அறியத்தந்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

நன்றி. *-சஞ்சீவி.*

( 46ம் பக்க தொடர்ச்சி )



எம்.செல்வகுமார் ராஜேஸ்வரி

முன்னிலையில் என்னை அடித்துத் துன்புறுத்தி எனது ஆடைகளை கழற்றி நிர்வாணப் படுத்தினார்கள். நான் மயக்க நிலையில் இருந்தேன். எனது வாயை எல்லாம் திறக்கச் சொல்லி சயனைட் வில்லையைத் தேடினார்கள். பொலிஸார் சொன்னதாலேயே இவற்றைச் செய்தோம் என அந்த கும்பல் கூறியது. பொலிஸார் முன்னிலையில் அவர்கள் கொண்டு போய் கொடுத்ததையும் எனக்கு பொலிஸார் முன்னிலையிலேயே அத்தனை கொடுமைகளையும் செய்ததைப் பார்த்தால் அவர்கள் சொன்னது உண்மை தான். பொலிஸ் நிலையத்தில் கூட "நாட்டிலுள்ள நிலைமையின் காரணமாக இவற்றையெல்லாம் தவிர்க்க முடியாது என அந்த கும்பலுக்கு சார்பாகவே கதைத்தனர். காயங்களுக்கு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று சிகிச்சையளித்த பின்னர் முகத்து வார பொலிஸாரிடம் என்னை ஒப்படைத்தனர். அங்கே என்னை விசாரித்து விட்டு விட்டனர்.

(இடம் பற்றாக்குறை காரணமாக இன்னும் சில சம்பவங்கள் வெளியிட முடியவில்லை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 4 | 5 | | 7 | 8 |
| 9 | | 11 | 12 | 13 | 14 | | 16 |
| 17 | 18 | 19 | | | 22 | 23 | 24 |
| 25 | 26 ம் | 27 | 28 | | 30 | 31 | |
| | 34 | 35 | 36 | | | | 40 |
| 41 | | 43 | 44 | 45 | 46 த | 47 | 48 |
| 49 | 50 | | 52 | 53 | 54 | 55 னை | |
| 57 | 58 | 59 | 60 | | 62 | 63 | 64 |

இலக்கம் : 28

உங்கள் பாவனைக்கு:-

அலுவலகப்பாவனைக்கு:-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

01:32 ,No: 28

afs. ______________________

______________________

______________________

______________________

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சஞ்சீவி

## ஆறு மலர்களுக்கான சந்தா விபரம்.

| | |
|---|---|
| Denmark | |
| Norway | 125 Kr. |
| Sweeden | |
| | |
| Australia | |
| Canada | |
| France | |
| Germany | 25 U$ |
| Italy | |
| London | |
| Switzerland | |

**காசோலை எடுக்க வேண்டிய கணக்கிலக்கமும்,முகவரியும்**

A/C.No:7601- 408876-9
CHANCHIVE
Vestjysk Bank
7500 Holstebro
Denmark.

**காசோலை அனுப்பவேண்டிய முகவரி:**

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Denmark.

**Post Giro No: 3 65 35 28**

"மறுக்கப்பட்டு,பழக்கமற்றுப்போனதொரு சுதந்திரமான
கருத்துப்பரிமாறலை உருவாக்குவதற்கு
எல்லோரது கருத்துக்களும்
வமர்சனங்களுமே
வழிவகுக்கும்"

www.tamilarangam.net